# தமிழரசு

1-8-1990 ரூ.1





பெருந்தலைவர் காமராசர் அவர்கள் பிறந்த நாளையொட்டி சென்னையில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், அரசுப் பொதுத் தேர்வில் முதன்மை பெற்ற மாணவ மாணவியர்க்குப் பரிசுகளை வழங்கினார். மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் டாக்டர் தமிழ்க்குடிமகன் அவர்களும், அமைச்சர் பெருமக்களும் கலந்து கொண்டனர் (15.7.90).



- ஆதி திராவிடர் நலனுக்குப் பாடுபட்ட அருளாளர்
- நந்தனார் குருகுலம் நிறுவிய சிந்தனையாளர்
- தீண்டாமை ஒழிப்புக்குப் பாடுபட்ட தீரர்
- சட்டமன்றத்திலும் மேலவையிலும் அங்கம்பெற்று சமுதாயத் தொண்டு செய்த செம்மல்
- துறவு வாழ்க்கை மேற்கொண்ட தூயர்

**சுவாமி சகஜானந்தா** அவர்களின்

நூற்றாண்டை முன்னிட்டு ஆகஸ்ட் 9-ல் சிதம்பரத்தில் அரசு சார்பில் விழா நடைபெற உள்ளது.

**சுவாமி சகஜானந்தா குறித்த கட்டுரைகள் 'தமிழரசு' 16.8.90 இதழில் இடம் பெறுகின்றன.**

# இந்த இதழில்...

இலங்கைத் தமிழர் பிரச்சினை:


தமிழகத்தில் முழு அடைப்பு ... 2

திருச்சி மாவட்டம் கரூருக்குக் காவிரி நீர் வழங்கும் திட்டம் ... 4

புதுக்கோட்டை மாவட்டத்தில் அரசு நலத்திட்ட உதவிகள் ... 6

பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாள் விழா ... 9

கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பளிக்கும் காதிகிராப்ட் ... 13

நூல் நயம் ... 16

பயன் பெற்றோர் பகர்வன ... 17

மாவட்டச் செய்திகள் ... 19

ராஜஸ்தான் மாநிலக் கைவினைப் பொருள் கண்காட்சி ... 23

தனித்தமிழ் இயக்கத் தந்தை மறைமலையடிகள் ... 24

மூன்று கட்டளைகள் ... 28

சிறுசேமிப்பு முதலீட்டாளர்களுக்கு மாபெரும் பரிசுத் திட்டம் ... 31

மாணவ மணிகளின் நலன் காக்கும் அரசு ... 33

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் - விளம்பரங்கள் ... 43



தமிழரசு

திருவள்ளுவர் ஆண்டு 2021

ஆடித் திங்கள் - 16

இதழ்: 3

மலர்:21 1-8-1990



20.7.90 முழு அடைப்பின் போது வெறிச்சோடிக்கிடக்கும்- சென்னையில் உள்ள அண்ணா சாலை.

இலங்கைத் தமிழர் பிரச்சினை

# தமிழகத்தில் முழு அடைப்பு

இலங்கையில் இராணுவத்தினரால் தமிழர்கள் படுகொலை செய்யப்படுவதைக் கண்டித்து, 20.7.90 வெள்ளிக்கிழமை அன்று, தமிழகம் முழுவதும் முழுஅடைப்பு வெற்றிகரமாக நடைபெற்றது. அத்தியாவசியப் பணிகள் என்று ஏற்கனவே விதி விலக்கு கொடுத்து அறிவிக்கப்பட்டவைகள் தவிர, மற்ற எந்தப் பணிகளும் நடைபெறவில்லை. மருத்துவமனைகள், குடிநீர், மின்சாரம், பத்திரிகைகள், தொலைபேசி, பால்விநியோகம், தீயணைப்பு போன்ற அத்தியாவசியப் பணிகளுக்கு முழு அடைப்பிலிருந்து விதிவிலக்கு அளிக்கப்பட்டது.

அன்றைய தினம் மாநில அரசு அலுவலகங்கள், உள்ளாட்சி நிறுவனங்கள், அரசின் பொதுத்துறை நிறுவனங்கள், தனியார்-அரசு போக்குவரத்து நிறுவனங்கள், வங்கிகள், பல்கலைக்கழகங்கள் போன்றவற்றிற்கும் பொது விடுமுறை அறிவிக்கப்பட்டது. மத்திய அரசு ஊழியர்களுக்குச் சிறப்பு விடுப்பு மத்திய அரசால் வழங்கப்பட்டது.

திரையரங்குகள், படப்பிடிப்புத் தளங்கள், கலையரங்குகள், கடைகள், உணவகங்கள் யாவும் மூடப்பட்டிருந்தன.

அட்டையில்:
இலங்கைத் தமிழ் அகதிகள் வருகையைக் குறிக்கும் படம்.

தனியார் நிறுவனங்கள், பொது வேலை நிறுத்தத்தையொட்டித் தங்கள் பணியாளர்களுக்குச் சம்பளத்துடன் கூடிய விடுமுறை வழங்கின.

புகைவண்டி மற்றும் விமானப் போக்குவரத்து அன்று காலை 6 மணிமுதல், மாலை 6 மணிவரை இயங்கவில்லை; அவைகளின் நேரங்களில் மாற்றம் செய்யப்பட்டிருந்தது. பஸ்கள், லாரிகள்- மற்றும் எந்த வாகனங்களும் அன்று ஓடவில்லை.

தமிழக மக்களின் ஒருமித்த உணர்வை இலங்கை அரசு புரிந்து கொள்ளப் பயன்படும்விதத்தில், தமிழகமெங்கும் முழுஅடைப்பு அமைதியாகவும், சிறப்பாகவும் நடைபெற ஒத்துழைப்பு நல்கிய அனைத்துத் தரப்பினருக்கும் அன்று மாலையே மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் செய்தியாளர் சந்திப்பின்போது நன்றி தெரிவித்துக் கொண்டார். அந்தச் சந்திப்பில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் பத்திரிகையாளர் கேள்விகளுக்குப் பதில் அளிக்கும்போது, ''தமிழ் மக்களுடைய உணர்வை இலங்கை அரசு புரிந்து கொள்ள வேண்டும். இலங்கை அரசு புரிந்து கொள்ள

மறுத்தால், இலங்கைத் தமிழர்களைக் காப்பாற்ற அரசியல் தீர்வு காண்பதற்கான நடவடிக்கை களை இந்திய அரசு உடனடியாக மேற்கொள்ள வேண்டும். இதற்கு இந்த முழு அடைப்பின் மூலம் வெளிப்படுத்தியுள்ள தமிழ் மக்களின் உணர்வு பயன்படும் என்று நம்புகிறேன்'' என்று குறிப் பிட்டார். மேலும், ''இலங்கைத் தமிழர் பிரச்னை யைத் தீர்க்க மத்திய அரசு முயற்சி மேற்கொள்ள வேண்டும்; மத்திய, வெளியுறவுத்துறை அமைச்சர் திரு. குஜ்ரால் நிலைமை இப்படியே போனால் 'இந்தியா சும்மா பார்த்துக் கொண்டிருக்கமுடியாது என்று சொல்லியிருக்கிறார். இருதரப்பிலும் போர் நிறுத்தப்படுவதற்கும், தமிழ் ஈழத்தில் அமைதி ஏற்படுவதற்கும் பேச்சு வார்த்தை மூலம் அரசியல் தீர்வு காண வேண்டும்'' என்றார்.



## பிரதமர் வி.பி.சிங் அறிவிப்பு

அதே நாளில் - (20.7.90) புதுடில்லியில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் வி.பி.சிங் அவர்கள், பத்திரிகையாளர்களைச் சந்தித்தார். அப்போது ஒரு வினாவிற்கு அவர் விளக்கமளிக்கையில் - ''இலங்கைப் பிரச்னையில் மத்திய அரசுக்கும் தமிழக அரசுக்குமிடையே எந்தவிதக் கருத்து மாறு பாடும் கிடையாது'' என்று குறிப்பிட்டார். இலங்கை யில் உள்ள தமிழ் மக்களின் உயிர்ப் பாதுகாப்பு குறித்து இந்தியா கவலை கொண்டுள்ளது; இவர் களைப் பாதுகாக்க அரசு சார்பில் நடவடிக்கைகள் துவக்கப்பட்டுள்ளன''. என்றும் அவர் தெரி வித்தார்.

## இலங்கைத் தமிழ் அகதிகளுக்கு உதவிகள்

21.7.90 அன்று மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் செங்கை-அண்ணா மாவட்டத்தில்- முத்துக்காடு, நெமலி, சாளுவன் குப்பம் ஆகிய இடங்களில் அமைக்கப்பட்டிருந்த இலங்கைத் தமிழ் அகதிகள் முகாம்களுக்கு நேரில் சென்று பார்த்து அவர்களது நலம், அவர்களுக்குச் செய்து தரப்பட்டுள்ள வசதிகள் பற்றி விசாரித்தறிந்தார். தமிழகத்தில் எல்லா வசதிகளும் செய்து தரப்படு வதாகவும் மகிழ்வோடிருப்பதாகவும் அனைவரும் முகமலர்ச்சியோடு தெரிவித்தனர்.

மாண்புமிகு முதல்வர் அவர்களுடன், மாண்புமிகு தமிழக அமைச்சர்கள் திரு.வீரபாண்டி எஸ்.ஆறுமுகம், திரு. கே.என். நேரு, திரு. க. சுந்தரம், செங்கை அண்ணா மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சமீர் வியாஸ், இ.ஆ.ப., மற்றும் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்களும் அந்த முகாம் களுக்குச் சென்றிருந்தார்கள்.

சென்னை திரும்பிய மாண்புமிகு முதல்வர் அவர்களை அன்றே செய்தியாளர் சந்தித்தனர். அப்போது, அவர் ''இன்று காலைவரை தமிழகம் வந்துள்ள மொத்த அகதிகளின் எண்ணிக்கை 28,725 ஆகும்; அகதிகளுக்கு இன்று முதல் இங்கே உடைகள் வழங்கப்படும்; அஃதன்னியில் தமிழக அரசின் சார்பாகச் சிறப்பு ஏற்பாடாக ஆகஸ்ட் 15-ஆம் தேதி சுதந்திர நாள் அன்று அகதிகளாக வந்துள்ள இலங்கைத் தமிழர்களுக்கு அவரவர்களுக்குத் தேவையான வேட்டி, சேலை, லுங்கிகள், குழந்தைகளுக்குச் சீருடைகள் வழங்கிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது'' என்றார்.

**மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு அவர்கள், பெரியார் மாவட்டம் கரட்டடிப் பாளையத்தில் உள்ள இலங்கை அகதிகள் முகாமிற்குச் சென்று பார்வையிட்டார் (24.7.90).**





# திருச்சி மாவட்டம் கரூருக்குக் காவிரி நீர் வழங்கும் திட்டம்

வளர்ந்துவரும் நகரமாகிய கரூர், தண்ணீர்த் தட்டுப்பாட்டால் பல ஆண்டுகளாகத் தவித்தது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள், மக்களின் குறையினைப் போக்க, குடிநீர் போதிய அளவு கிடைத்திடும் வகையில் திட்டம் தயாரிக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு உத்தரவிட்டார்.

கரூர் நகருக்கு ஒரு விரிவான தன்னிறைவு அளிக்கக்கூடிய வகையில் குடிநீர்த் திட்டம் ஆய்வு செய்யப்பட்டு, முடிவில் காவிரி ஆற்றை ஆதார மாகக் கொண்டு ரூ.407.69 இலட்சத்திற்குத் திட்டம் தீட்டப்பட்டது. இத்திட்டத்திற்கு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கரூர் நகரில் 10.7.90 அன்று அடிக்கல் நாட்டினார். இத்திட்டத்தின்படி நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 125 லிட்டர் வீதம் குடிநீர் வழங்க வகை செய்யப்பட்டுள்ளது. தற்போது கரூர் நகரில் நபர் ஒருவருக்கு 56 லிட்டர் வீதம்தான் குடிநீர் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

இத்திட்டம் 2016-ஆம் ஆண்டில் 1,81,300 மக்கள் பயன்பெறும் வகையில் வடிவமைக்கப் பட்டுள்ளது. இத்திட்டப்படி கரூரிலிருந்து 13 கி.மீ. தொலைவிலுள்ள நெரூர் அருகே காவிரி ஆற்றில் 6 மீட்டர் விட்டமுள்ள ஒரு சேகரிப்புக் கிணறு அமைக்கப்படவுள்ளது. இக்கிணற்றிலிருந்து கிடைக்கும் குடிநீர் 135 குதிரைத்திறன் கொண்ட நீரேற்றிகளின் மூலம், 13 கி.மீ. நீளமுள்ள கல்நார் நீரேற்றுக் குழாய் மற்றும் 13.328 கி.மீ. நீளமுள்ள பிரிவு நீரேற்றுக் குழாய் மூலம், கரூர் நகருக்குக் கொண்டு செல்லப்படும். இவை கரூர் நகரில் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ள 7 மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டிகள் மற்றும் புதியதாகக் கட்டப்பட வுள்ள 4 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளில் சேகரிக்கப்பட்டு, கரூர் நகர மக்களுக்கு விநி யோகிக்கப்படவுள்ளது. இத்திட்டத்தின் மூலம் கரூர் மக்களின் நீண்டகாலக் கனவு செயலாகி வருகிறது.

கரூரில் நடைபெற்ற விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்கள் 27,554 நபர்கள் பயன் பெறும் வண்ணம் ரூ.26.82 கோடி அளவிற்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித்திட்டத்தின் கீழ் 400 நபர்களுக்கு தலா ரூ.5,000 வீதம் ரூபாய் 20 இலட்சம் விநி யோகிக்கப்பட்டது. டாக்டர் முத்துலட்சுமி மகப் பேறு உதவித்திட்டத்தின் கீழ் 3470 நபர்களுக்கு தலா 200 வீதம் ரூ.6.94 இலட்சம் வழங்கப் பட்டது. டாக்டர் தர்மாம்பாள் விதவை மறுமணத் திட்டத்தின் மூலம் இருவருக்கு தலா 5,000 வீதம் ரூ.10 ஆயிரம் வழங்கப்பட்டது.

## பாவேந்தர் நூற்றாண்டு:



ஒருதமிழன் தமிழர்க்கே
உயிர்வாழ் கின்றான்;
உயிர்வாழ்வோன் தமிழர்க்கே
தனைஈ கின்றான்!
அரியபெரும் செயலையெலாம்
தமிழ்நாட் டின்பின்
ஆழத்தில் காணுகின்றான்!
தமிழன் இந்நாள்
பெரிதான திட்டத்தைத்
தொடங்கி விட்டான்!
'பிறந்துளார் தமிழறிஞர்
ஆதல் வேண்டும்;
வருந்தமிழர் வையத்தை
ஆள வேண்டும்!'
வாழ்கதமிழ்! இவ்வையம்
வாழ்க நன்றே!

ஊரக வளர்ச்சித்துறையின் மூலம் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் 4021 நலிந்தோர்க்கு மான்யக் கடனாக ரூ.250.25 இலட்சம் வழங்கப்பட்டது. கரூர் நகராட்சியில் பணியாளர்களில் குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கு ''சொந்த வீடு'' வழங்கும் திட்டத்தின்கீழ் 13 நபர்கள் ரூ.13 இலட்சங்களைப் பெற்றார்கள்.

1,000 பேருக்கு ''முதியோர் உதவித் தொகை வழங்கும் திட்டத்தின்'' கீழ் ரூ.50,000 வழங்கப்பட்டது. 9,252 நபர்களுக்கு ரூ.92.52 இலட்சம் மதிப்புள்ள வீட்டுமனைப்பட்டாக்கள் வழங்கப்பட்டன. 590 ஆதி திராவிடர்களுக்கு ரூ.8.85 இலட்சம் மதிப்புள்ள வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்பட்டன.

**கரூர் நகருக்கு 110 கி.வா. துணை மின் நிலையம்**

கரூர் நகரில் மின் தட்டுப்பாடு போக்கிடவும், தொழில் வளம் பெருகிடவும் புதியதாக அமைக்கப்பட்டுள்ள 110 கி.வா. திறன் கொண்ட துணை மின் நிலையத்தினை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் துவக்கி வைத்தார். இம்மின் நிலையத்தினை நிறுவிட ஆன செலவு ரூ.191 இலட்சமாகும்.

பல்வேறு அரசுத்துறைக் கட்டடங்களும் திறந்து வைக்கப்பட்டன.

மாண்புமிகு முதல்வர் அவர்கள் தன் உரையில் குறிப்பிட்டதாவது:

''குடிநீர் வடிகால் வாரியம் இடைக்காலத்தில் சரியான முறையில் செயல்படாமல் போய் மீண்டும் இப்போது செயல்படத் தொடங்கியுள்ளது.

''குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் தமிழகத்தில் 10 ஆயிரம் குழாய்கள் கடந்த காலத்தில் போடப்பட்டு தொடர்ந்து அந்தப் பணி நிறைவேற வேண்டும் என்று முடுக்கி விடப்பட்டு அவற்றில் ஒரு கூறாக இன்றைக்கு இந்த வட்டாரத்துக்குத் தண்ணீர் தரப்படுகின்ற ஒரு திட்டம் இன்று தொடங்கி வைக்கப்படுகின்றது.

''இதைப்போலவே நிலையான நிரந்தரத் திட்டங்களாகத் தொழிற்சாலைகள் அமைய வேண்டும் என்பதற்காகச் சிறு தொழில்கள், நடுத்தரத் தொழில்கள், பெருந்தொழில்கள் ஆகியவை ஊக்கப்படுத்தப்பட வேண்டும். 3-ஆவது இடத்திலே இருந்த தமிழகத் தொழில் வளர்ச்சித் திட்டம் இடையிலே 13 ஆண்டுக்காலத்தில் 13-ஆவது இடத்திற்குப் போய்விட்டது. அதனை மீண்டும் 3-ஆவது இடத்திற்குக் கொண்டுவர வேண்டும். முடியுமானால், முதல் இடத்திலே கொண்டுவந்து நிறுத்தவேண்டும் என்ற முயற்சிகளை அரசு மேற்கொண்டுள்ளது.

''மின்சாரத் துறையிலே எவ்வளவோ இடையூறுகள் இருந்தன. 1989-ஆம் ஆண்டில் 60 சதவிகித மின்வெட்டு இருந்தது. எண்ணூர், மேட்டூர், கல்பாக்கம் ஆகிய மின் உற்பத்தி நிலையங்கள் பழுதாகி இருந்தன. நெய்வேலியிலிருந்தும் சரியாக மின்சாரம் பெற இயலவில்லை. இவற்றையெல்லாம் இந்த அரசு சீர் செய்ததன் காரணமாக இன்றைக்கு இந்தியாவிலேயே மின்வெட்டு இல்லாத மாநிலம் தமிழ்நாடுதான் என்ற நிலையை உருவாக்கியுள்ளோம்''.

இந் நிகழ்ச்சியில் திருச்சி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு கண். தீனதயாளன், இ.ஆ.ப. அவர்கள் மாவட்ட அலுவலர்கள் சார்பில் ரூ.1.50 இலட்சம் முதல்வர் நிவாரண நிதிக்கு வழங்கினார்.

விழாவிற்கு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு கே.என். நேரு தலைமை வகித்தார்.

விழாவில் மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் திரு மு. கண்ணப்பன், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு கோ.சி. மணி, மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு துரைமுருகன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் டாக்டர் க. பொன்முடி, மற்றும் நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் சிறப்புரையாற்றினார்கள். மாவட்ட ஆட்சியர் திரு கண். தீன்தயாளன் வரவேற்புரையாற்றினார்.

திருச்சி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைத் திட்ட அலுவலர் திரு ப. கனகசபை நன்றியுரை யாற்றினார்.

**தகவல்: எல். சுதாகர்**
**உதவி மக்கள் தொடர்பு அலுவலர்,**
**திருச்சி.**

புதுக்கோட்டை மாவட்டத்தில்

# அரசு நலத்திட்ட உதவிகள்

புதுக்கோட்டையில் 9.7.90அன்று அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழாவில் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பல்வேறு நல்வாழ்வுத் திட்டங்களைத் துவக்கி வைத்தும், அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கியும் உரையாற்றினார். அப்போது அவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

''இன்றைக்குப் புதுக்கோட்டையிலே குடிநீர்த் திட்டம் ஏறத்தாழ 19 கோடி ரூபாய் செலவிலும், டானிடா கால்நடை மேம்பாட்டுத் திட்டம் ஏறத்தாழ நாலரைக் கோடி ரூபாய் செலவிலும், தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய வாடகைக் குடியிருப்பு ஒரு கோடியே எண்பது இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலும், 400 ஆதிதிராவிடர் கூட்டுக் குடியிருப்பு இல்லங்கள் ஏறத்தாழ 57 இலட்சம் ரூபாய் செலவிலும், ஊராட்சி மன்ற அலுவலகக் கட்டடங்கள், பள்ளிக் கட்டடங்கள் இவைகளெல்லாம் மொத்தம் ஏழரை இலட்சம் ரூபாய் செலவிலும், புதுக்கோட்டை அரசு மருத்துவமனையில் விபத்து மற்றும் அவசரச் சிகிச்சைப் பிரிவுக்காக 15 இலட்சம் ரூபாய் செலவிலும், 4 படுக்கைகள் கொண்ட கண் சிகிச்சைப் பிரிவு ஒரு இலட்சத்து அறுபது ரூபாய் செலவிலும், அரசினர் ராணியார் மருத்துவமனையில் 20 படுக்கைகள் கொண்ட குழந்தைகள் சிகிச்சைப் பிரிவு நாலேகால் இலட்சம் ரூபாய் செலவிலும், பலநோக்குச் சிகிச்சைப் பணியாளர்கள் தங்குமிடம் 50 இலட்சம் ரூபாய் செலவிலும், திருவரங்குளம் செவிலியர் பயிற்சி நிலையம் 23 இலட்சம் ரூபாய் செலவிலும், திருமயம் ஆதிதிராவிடர் மாணவர் விடுதி 20 இலட்சம் ரூபாய் செலவிலும் ஆக மொத்தம் 27 கோடியே 11 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் திட்டங்கள் செயல்படுத்தப்படுகின்றன.

''திருமணம் ஆகாமல் இருக்கின்ற - 8-ஆம் வகுப்பு வரையிலே படித்த பெண்களுக்குத் தலா 5,000 ரூபாய் வீதம் இன்றைக்கு மாத்திரம் 100 பெண்களுக்கு 5 இலட்சம் ரூபாயும், அதைப் போலவே, கர்ப்பிணிப் பெண்களுக்குத் தலா 200 ரூபாய் என்ற வகையில் 200 பேருக்கு இன்றைக்கு 40,000 ரூபாயும், டாக்டர் தருமாம்பாள் நினைவு

## 30 கோடி ரூபாய்
## மதிப்பீட்டில்
## நல்வாழ்வுத் திட்டங்கள்

மறுமண உதவித் திட்டத்தின் கீழ் இரண்டு பேருக்கு 10,000 ரூபாயும், அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமணத் திட்டத்தின்கீழ் இரண்டு பேருக்கு 10,000 ரூபாயும், மற்றும் இலவசத் தையல் இயந்திரம், ஊனமுற்றோர்க்குச் சக்கர நாற்காலிகள், சலவைப் பெட்டிகள், வீட்டுமனைப் பட்டாக்கள், விபத்து நிவாரணம் என்கின்ற பெயரில் கிட்டத்தட்ட 2 கோடியே 18 இலட்சம் ரூபாய் ஆக மொத்தம் 30 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே நல்வாழ்வுத் திட்டங்கள் இந்த மகத்தான விழாவிலே வழங்கப்படுகின்றன.''

# அரசின் அறிவிப்புகள்

★ நடப்புக் கல்வியாண்டில் 70 புதிய உயர்நிலைப் பள்ளிகளை ஏற்படுத்தவும் ஏற்கனவே இருந்துவரும் 40 உயர்நிலைப் பள்ளிகளை மேநிலைப் பள்ளிகளாக மாற்றவும் தமிழக அரசு அனுமதி வழங்கியுள்ளது என்று மாண்புமிகு கல்வி அமைச்சர் பேராசிரியர் க.அன்பழகன் அவர்கள் அறிவித்தார்.

★ தமிழகத்தில் தொழில்கள் வளர, தொழில் வளம் பெருக, மின் உற்பத்தியை அதிகரிக்க தமிழக அரசு மேற்கொண்டுள்ள முயற்சிகளின் காரணமாகத் தமிழகத்தில் தற்போது மின்வெட்டு முழுதும் இல்லையென்றும், இந்தியாவிலேயே மின்வெட்டு இல்லாத மாநிலம் தமிழ்நாடுதான் என்றும் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 5.7.90 அன்று ஆண்டிப்பட்டியில் அறிவித்தார்.

அம்பேத்கார் நூற்றாண்டு



உலகிலுள்ள எல்லாமே மாறுதலுக்கு உட்பட்டதுதான். சமுதாயமேயானாலும் சரி; தனிப்பட்ட மனிதனேயானாலும் சரி- காலத்தோடும் கால மாற்றத்தோடும் சேர்ந்து இணைந்து செல்லக் கூடிய மனப்பக்குவம் பெறவேண்டும்; அதுவே உண்மையான நாகரிகம் ஆகும்.



மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் திரு நாஞ்சில் கி. மனோகரன் அவர்கள் 23.7.90 அன்று மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண உதவித் திட்டத்தின்கீழ், சென்னை - திருவல்லிக்கேணி தொகுதியைச் சேர்ந்த நான்கு பெண்களுக்குத் தலா ரூ.5 ஆயிரம் வழங்கினார்.

# படமும் செய்தியும்

மாண்புமிகு செய்தி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திரு கே.என். நேரு அவர்கள்- 18.7.90 அன்று சென்னை - இராதா கிருட்டிணன் நகர்ப் பகுதியில் தீவிர துப்புரவுப் பணிகளின் இயக்கத்தைத் துவக்கி வைத்தார்; பொதுமக்கள் குறைகளைக் கேட்டறிந்தார். தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் திருமதி எஸ்.பி. சற்குணம் அப்போது உடன் இருந்தார்.



**TNPSC**

விளம்பர எண்: 23/90

தமிழ்நாடு கால்நடை பராமரிப்புத் துறையில் 200 கால்நடை உதவி அறுவை மருத்துவர் பதவிகளுக்கு நேரடித் தேர்வின் மூலம் நியமனம் செய்ய விண்ணப்பங்கள் 20.8.1990 அன்று மாலை 5.45 மணி வரை வரவேற்கப்படுகின்றன.

**சம்பளம்:** மாதம் ஒன்றுக்கு ரூபாய் 2000-60-2300-75-3200-100-3500.

| | | |
|---|---|---|
| (ஆதி திராவிடர் வகுப்பினர்/பழங்குடி வகுப்பினர் (ஆ.தி.வ./ப.வ.) | : | 33 (8 காலியிடங்கள் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது) |
| மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினர் (மி.பி.வ./சீ.ம.) | : | 55 (முன் தேர்வில் நிரப்பப்படாத 19 காலியிடங்கள் உட்பட) (10 காலியிடங்கள் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது) |
| பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (பி.வ) | : | 54 (17 காலியிடங்கள் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது). |
| பகிரங்கப் போட்டி | : | 58 (17 காலியிடங்கள் பெண்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது) |

**குறிப்பு:** தெரிவு செய்யப்பட தேர்ச்சியும், தகுதியும் வாய்ந்த பெண் விண்ணப்பதாரர்கள் கிடைக்கப் பெறாவிடில் அக்காலியிடங்கள் ஆண் விண்ணப்பதாரர்களால் நிரப்பப்படும்.

**வயது:** 1.7.1990 அன்று 30 வயதிற்குக் குறைவாக

**தகுதி:** (i) B.V.Sc. degree; and

(ii) Must be a registered practitioner within the meaning of the Tamil Nadu Registration of Veterinary Practitioners Act., 1957 (Tamil Nadu Act. XXI of 1957)

**NOTE:** Preference will be given to destitute widows who posses the prescribed qualification and who secure atleast the minimum marks for selection.

**EXPLANATION:** 'Destitute widow' means a widow who has neither any means by herself to live nor any dependant to protect her from starvation.

ஆ.தி.வ./ப.வ., மி.பி.வ./சீ.ம., மற்றும் பி.வ. ஆதரவற்ற விதவைகள், தாயகம் திரும்பியவர்கள், முன்னாள் இராணுவத்தினர், உடல் ஊனமுற்றோர், நாற்பது வயதிற்குக் குறைவாக உள்ள பணியிலிருந்து விடுவிக்கப்பட்ட மற்றும் பணியிலிருக்கின்ற தற்காலிக மாநில அரசுப் பணியாளர்கள் போன்றவர்களுக்கு வயது மற்றும்/அல்லது தகுதியிலிருந்து அளிக்கப்படும் சலுகைகள் மற்றும்/அல்லது விண்ணப்பக் கட்டணச் சலுகைகள் தேர்வாணையத்தின் ''பணிவேட்பாளர்களுக்கான விதிமுறை'' களில் தரப்பட்டுள்ளன.

(பிற்படுத்தபட்ட வகுப்பினருக்கு வழங்கப்படும் சலுகைகள் மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்/சீர்மரபினருக்கும் பொருந்தும்.).

விண்ணப்பப்படிவமும், நியமனத்தைப் பற்றிய முழு விவரங்களும் செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு எழுத்துமூலம் கோரிப் பெற்றுக் கொள்ளலாம். கோரிக்கைகள் தமிழிலோ அல்லது ஆங்கிலத்திலோ பதவியின் பெயர் மற்றும் விளம்பர எண் ஆகியவற்றைக் குறிப்பிட்டு எழுதப்பட்டு, செயலாளர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை-600 002 அவர்களுக்கு வழங்கக்கூடிய 1.7.1990 அன்றோ அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட பத்து ரூபாய்க்கான (ரூபாய்10/-) சென்னை அண்ணாசாலை தபால் அலுவலகத்தில் செலுத்தத் தக்க கோடிட்ட அஞ்சல் ஆணை அல்லது பாரத ஸ்டேட் வங்கியின் (State Bank of India) ஏதாவதொரு கிளையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணைய செயலாளருக்கு வழங்கக் கூடிய 1.7.1990 அன்றோ அல்லது அதற்குப் பிறகோ வாங்கப்பட்ட, சென்னை-600 006 ஆயிரம் விளக்கு பாரத ஸ்டேட் வங்கியில் செலுத்தத்தக்க பத்து ரூபாய்க்கான (ரூபாய்10/-) ''கேட்புக் காசோலை'' (Demand Draft)-யுடன் சுயவிலாசம் எழுதிய உறையுடனும் (26 × 12 செ.மீ) அனுப்ப வேண்டும். கோரிக்கைகள் பிறமொழியில் இருக்குமாயின் அத்துடன் ஆங்கிலமொழி பெயர்ப்பும் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். மேற்கூறியவற்றை நிறைவு செய்யாத கோரிக்கைகள் கவனிக்கப் படமாட்டா.

டிஐபிஆர்/1796/எம்எஸ்/90/எம்சிஎஸ்



இரண்டாம் அட்டை சொல்லும் செய்தி:

# பெருந்தலைவர் காமராசர் பிறந்த நாள் விழா

பெருந்தலைவர் காமராசர் அவர்களின் 88-வது பிறந்த நாள் விழா, 15.7.90 அன்று சென்னை கலைவாணர் அரங்கில் சிறப்புற நடை பெற்றது.

தமிழகக் கல்வித்துறைச் செயலர் திரு வி. சங்கர சுப்பையன் இ.ஆ.ப. அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் திரு தமிழ்க்குடிமகன் அவர்கள், விழாவிற்குத் தலைமை வகித்துப் பேசுகையில், ஜாலியன் வாலாபாக் படுகொலை, வைக்கம் போராட்டம் ஆகிய நிகழ்ச்சிகளை நினைவு கூர்ந்தார்.

அவர் மேலும் பேசுகையில், ''பள்ளித் தேர்வு களில் முதலிடம் பெற்றுள்ள மாணவ, மாணவி யருக்கு மொத்தம் சுமார் இலட்சம் ரூபாய் ரொக்கப் பரிசுகளை இந்த விழாவில் அரசு வழங்குகிறது.

''இலவசக் கல்வித் திட்டத்தைக் காமராசர் கொண்டு வந்தார். எனினும், கல்வியறிவு பெறாத வர்கள் எண்ணிக்கை அதிகம் உள்ளது. எனவே, இந்த அரசு கட்டாயக் கல்வித் திட்டத்தைக் கொண்டு வர வேண்டும்.'' என்றார்.

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திரு க. சுந்தரம் அவர்கள் பேசுகையில், ''ஏழை எளியவர்கள் கல்வியில் முன்னேற வேண்டும் என்று பெருந்தலைவர் காமராசர் இலவசக் கல்வி யைக் கொண்டு வந்தார். அவரது எண்ணங்களை நிறைவேற்றுவதே நாம் அவருக்குச் செலுத்தும் அஞ்சலியாகும்'' என்றார்.

மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு துரைமுருகன் அவர்கள் பேசுகையில், ''பெருந் தலைவர் காமராசர் அவர்களின் பிறந்த நாளின் போது, அரசுப் பொதுத் தேர்வுகளில் முதன்மை பெற்ற மாணவ, மாணவியர்க்குப் பரிசுகள் வழங் குவது பொருத்தமாகும். இன்று இலவசச் சீருடை, இலவசப் பாடப்புத்தகம், இலவச பஸ்பாஸ் எல்லாம் வழங்கப்படுவதற்குக் காரணம், எல்லாரும் படித்து முன்னேற வேண்டும், அறியாமை அகல வேண்டும், மற்ற நாடுகளோடு போட்டி போடத் தக்க அளவுக்கு உயர வேண்டும் என்பதற்காகத் தான்'' என்றார்.

மாண்புமிகு கல்வியமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள் மாநில முதன்மை பெற்ற 10 மற்றும் பிளஸ் 2 வகுப்பு மாணவ, மாணவி யர்க்கும், ஆங்கிலோ-இந்தியன், மெட்ரிகுலேசன், கீழ்த்திசைப் பள்ளிகள் பொதுத் தேர்வுகளில் முதன்மை பெற்ற மாணவ, மாணவியர்க்கும், பிற படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, ஆதி திராவிட-பழங்குடி மாணவ-மாணவியர்க்கும் ரொக்கப்பரிசுகள் வழங்கிப் பாராட்டிப் பேசினார். அப்போது அவர் பேசுகையில் —

''தமிழக முதல்வர் கலைஞர் இன்றியமையாத கடமை காரணமாக, டெல்லி சென்றதால் இங்கு பரிசு வழங்க வர இயலவில்லை. இருந்தாலும், அவரது வாழ்த்து இங்கு பரிசு பெறும் அத்தனை மாணவ-மாணவியருக்கும் உண்டு.

''காமராசர் பிறந்தநாள் விழாவின்போது மாணவ-மாணவியருக்குப் பரிசு வழங்க வேண்டும் என்று அறிவித்தவரே கலைஞர்தான்.

''அரசியல் கருத்து வேறுபாடு இருந்தாலும் பொது நன்மை கருதி, எந்த ஏழை மக்கள் கல்வி பெற வேண்டும் என்று காமராசர் விரும்பி னாரோ, அந்த உணர்வோடு தமிழக அரசு இந்தப் பரிசளிப்பு விழாவை நடத்தி வருகிறது.

# சென்னை மாநகரில் நேரு வேலை வாய்ப்புத் திட்டம்

நேரு வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் சென்னை மாநகரில் இந்த ஆண்டு 10 ஆயிரம் பேர் பயனடைவார்கள். இந்திய அரசும் மாநில அரசும் வறுமையைப் போக்க கிராமப்புறங்களிலும் நகரங்களிலும் இத்திட்டத்தை ஏற்படுத்தியுள்ளன. சென்னை மாநகரில், இதைச் சென்னை மாநகராட்சி நிறைவேற்றுகின்றது. முதல் கட்டமாக 3,000 பேர்களுக்கு 90 தொழில்களில் பயிற்சியளிக்க 40 முகாம்களைத் தன்னியக்கத் தொண்டு நிறுவனங்களும் தனியார் நிறுவனங்களும் செயற்படுத்தும். சென்னையில் இந்திய மாதர் சங்கம், 25 மகளிர்க்கு அண்ணா நகரில் உள்ள தையல்கலைப் பயிற்சி நிலையத்தின் மூலம் பயிற்சி அளிக்கும். இத்திட்டம் மானியத்துடன் கூடிய கடன் மற்றும் பயிற்சி அளித்தல் ஆகிய இரு பகுதியை உடையது; பயிற்சிக் காலத்தில் ஒவ்வொருவருக்கும் ரூ.150 உதவித் தொகை வழங்கப்படும். பின் 25 சதவீதம் மானியத்துடன் கூடிய கடன்கள் வங்கிகள் மூலம் பெற்றுத் தரப்படும். அதிகபட்சம், தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்கு ரூ.5,000 என்றும், பிற வகுப்பினருக்கு ரூ.4,000 என்றும் கடன்கள் வழங்கப்படுகின்றன."

இந்திய மாதர் சங்கம், சென்னை மாநகராட்சி, இந்தியன் வங்கி ஆகிய வற்றின் சார்பில் சென்னை அண்ணா நகரில் மகளிர் தையற்பயிற்சி நிலையத் தொடக்க விழாவில் (11.7.90) மாநகராட்சி ஆணையர் திரு. மு. அபுல்ஹாசன் இத் தகவலைத் தெரிவித்தார்

''தமிழ்நாட்டில் பரவலாகக் கல்வி வளர்ந்து வருகிறது. கல்வி பயில்வோர் எண்ணிக்கை ஆண்டுக்கு ஏறத்தாழ 10 சதவீதம் உயர்ந்து வருகிறது. 10-ஆம் வகுப்புத் தேர்வில் கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு 50 ஆயிரம் பேரும், மேல்நிலைத் தேர்வில் 30 ஆயிரம் பேரும் அதிகம் எழுதி உள்ளனர். மகளிரைப் படிக்க வைக்கும் ஆர்வம் பெற்றோரிடம் மெல்ல வளர்ந்து வருகிறது.

''கல்வி பரவலாக உயர்ந்த போதிலும் உயர்தரக் கல்வி, பல்கலைக் கழகக் கல்வி ஆகிய வற்றைச் சிறப்பாக வளர்க்க மாநில அரசாலும், மத்திய அரசாலும் மட்டும் முடியாது. அவற்றைச் சிறப்பாக வளர்க்கும் பொறுப்பில் மக்களை ஏற்கச் செய்ய மத்திய அரசு ஆலோசனை வழங்கி வருகிறது.

''தமிழகத்தைப் பொறுத்தவரை ஆரம்பக் கல்விக்கு முக்கியத்துவம் தரப்படுகிறது. மொத்தச் செலவில் 3-ல் ஒரு பங்கு அதாவது ரூ.400 கோடி தொடக்கக் கல்விக்குச் செலவிடப் படுகிறது. அந்தக் கல்வியின் தரத்தையும் உயர்த்தத் திட்டமிட்டே தொடக்க நிலையிலும் மாணவ-மாணவியருக்குத் தேர்வு நடத்த முடிவு செய்துள்ளோம். அதேபோல உயர்நிலைக் கல்வியில் 20 சதவிகிதம் மதிப்பெண் பெற்றால் தேர்ச்சி என்பதையும் உயர்த்த அரசு திட்டமிட்டு இருக்கிறது.

''ஆசிரியர்களுக்கும் தகுந்த பயிற்சி அளிக்கும் முயற்சியிலும் அரசு ஈடுபடும். இந்த முயற்சிகளுக்கு ஆசிரியர்கள் ஒத்துழைக்க வேண்டும். பல நேரங்களில் ஆசிரியர்கள் தங்கள் குறைகளைப் பற்றித்தான் எடுத்துக் கூறுகிறார்கள். மாணவர்களுக்குப் பாடம் நடத்தும் முறை பற்றிக் குறிப்பிடுவதில்லை.

''கல்வி என்றால் ஆசிரியர் சம்பளம் உயர வேண்டும் என்று நினைக்கக் கூடாது. நான் 10-ஆம் வகுப்பு படிக்கும்போது 1939-ஆம் ஆண்டு மாதம் ரூபாய் 5.50 சம்பளம் கட்டிப் படித்தேன். இப்போது 50 ஆண்டுகளுக்குப் பிறகு பார்க்கும் போது, முன்பு ரூ.5 என்பது பவுன் மதிப்பில் பார்த்தால் ரூ.160, விலைவாசி கணக்கில் பார்த்தால் ரூ.150 சம்பளம் செலுத்தும்படி படிக்க வேண்டும். அப்படியென்றால் ஏறத்தாழ 100-க்கு 30 பேர் தான் படிப்பார்கள்.

''இப்போது படிக்கும் ஒரு கோடியே 20 இலட்சம் பேரில் 50 இலட்சம் பேர் தொடக்கப் பள்ளியில் படிப்பவர்கள் மாதச் சம்பளம் கட்டிப் படிப்பது என்றால் அது 30 சதவிகிதம் குறைந்து விடும்.

''பெற்றோர்-ஆசிரியர் சங்கம் ஏற்படுத்தி அந்தந்தப் பகுதியில் கல்வியை உயர்த்த ஆசிரியர் சமூகத்தைக் கேட்டுக் கொள்கிறேன். ஆசிரியருக்கும் மாணவருக்கும் நெருக்கமான உறவு இருந்தால் தான் நல்லது. அந்த உறவு இல்லாத பள்ளிகளில் மாணவர்களிடம் முன்னேற்றம் இருக்காது. இந்த வித்து முளைத்து வளர்ந்து செழித்து அவைகளில் இருந்து வருகிற மணிகள்தான் நாட்டின் பல்வேறு பஞ்சத்தைத் தீர்த்து வைக்கும். எனவே, ஆசிரியர், பெற்றோர், மாணவர் என்ற 3 பிரிவினரும் இணைப்பாகச் செயல்பட வேண்டும் என்று தொடர்புடையவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

''இந்த ஆண்டு கல்விக்கு ரூ.1,042 கோடி செலவிடப்படுகிறது. அதைவிட அதிகரிக்கலாம். கடந்த காலத்தில் ரூ.900 கோடி செலவிடப்பட்டது. ஆதிதிராவிட மாணவர்களுக்கு விடுதி கட்ட உதவித் தொகையாக ரூ.100 கோடி செலவிடப்படுகிறது. பிற்படுத்தப்பட்டோர் துறை, சமூக நலத்துறை, சத்துணவுத் துறை எனப் பல் வேறு பிரிவிலும் கல்விக்காகச் செலவிடப்படுகிறது.

''ஏழ்மை கல்விக்குத் தடையாக இருந்து விடக் கூடாது. படிப்பதை நிறுத்தக் காரணமாக வறுமை இருந்துவிடக்கூடாது. பின்தங்கிய நிலையில் இருப்பவர்கள், தாழ்த்தப்பட்ட நிலையில், முடக்கப்பட்ட நிலையில் இருப்பவர்கள் கல்வி பெற்றால்தான் சமத்துவம் வளரும். மனிதத் தன்மை வளரும். அதற்கு அரசு பாடுபடுகிறது.

''பேரறிஞர் அண்ணா அந்தச் சமுதாயத்தை உருவாக்கப் பாடுபட்டார். அத்தகைய நல்ல

கடமையை அரசு ஆற்றும்போது தகுந்த ஆதரவை ஆசிரியர்கள் உருவாக்க வேண்டும்.

''பாடப் புத்தகங்கள் 8-ஆம் வகுப்பு வரை ஏழை மாணவர்களுக்கு இலவசமாக வழங்கப்படு கின்றன. அவற்றில் அச்சில் சிறு பிழைகள் இருந் தாலும் ஏடுகளில் பெரிது படுத்தி வருகிறார்கள். நாங்கள் படித்தபோது ஒவ்வொரு பள்ளிக்கும் ஒவ்வொரு விதமாகப் புத்தகங்கள் இருந்தன. இப்போது தமிழ்நாடு முழுவதும் 8-ஆம் வகுப்பு வரை அரசு, மாநகராட்சி, நகராட்சி, ஒன்றியப் பள்ளிகளில் ஒரே மாதிரியான புத்தகங்கள் வெளி யிடப்படுவதால் குறையைப் பெரிதாக மதிக் கிறார்கள். அந்தக் குறைகளையும் களைய அரசு முயற்சி எடுத்து வருகிறது.

''10-ஆம் வகுப்புப் பாடத்திட்டம் கடுமையாக இருப்பதாக ஒரு . பத்திரிகையில் எழுதப்பட்டு உள்ளது. இதுகுறித்துக் கேட்டபோது, சற்றுக்கடுமை யாக இருந்தாலும் ஆசிரியர்கள் ஆர்வத்தோடு கற்றுக் கொடுத்தால் அந்த மாணவர்கள் கல்லூரிப் படிப்பில், பொறியியல், மருத்துவத் துறைக்கான போட்டித் தேர்வு எழுதுவதற்குச் சிறந்த பயிற்சி பெற்றவர்களாக விளங்குவார்கள் என்று கூறு கிறார்கள். ஒவ்வொன்றையும் பரிசீலனை செய்ய அரசு தயாராக இருக்கிறது. உரிய திருத்தங்கள் தேவையான ஆய்வு மூலம் நடத்தப்படும்.

''சிறந்த முறையில் பயிற்சி அளித்து 100-க்கு 100 தேர்ச்சி பெற்ற பள்ளிகளுக்குச் சான்றிதழ் விரைவில் அனுப்பி வைக்கப்படும். 100-க்கு 60 சதவிகிதம் தேறிய பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு இப்போதே பாராட்டுந்தெரிவித்துக் கொள்கிறேன். 100-க்கு 30 சதவிகிதம் தேர்ச்சி உள்ள பள்ளி களின் ஆசிரியர்கள் கண்டிக்கப்பட வேண்டிய வர்கள்.

''ஆங்கிலம் உள்பட பல பாடங்களில் 100-க்கு 100 மதிப்பெண் வாங்கி இருக்கிறார்கள். ஆனால், தமிழில் மட்டும் யாரும் 100-க்கு 100 வாங்க வில்லை. இதற்கு மாணவர்கள் காரணம் இல்லை. ஆசிரியர்கள்தான் அந்த அளவுக்குப் பயிற்சி தர வில்லை.'' என்று குறிப்பிட்டார்.

தமிழ், ஆங்கிலம், சிறப்புத் தமிழ்ப் பாடங் களில் சிறப்பாகத் தேர்ச்சி பெற்றவர்களுக்கு முதல் பரிசு ரூ.5 ஆயிரமும், 2-வது பரிசு ரூ.3 ஆயிரமும், 3-வது பரிசு ரூ.2 ஆயிரமும் வழங்கப்பட்டது. மற்ற பாடங்களுக்கு முதல் பரிசு ரூ.3 ஆயிரமும், 2-வது பரிசு ரூ.2 ஆயிரமும், 3-வது பரிசு ரூ. ஆயிரம் வீதத்தில் பரிசுகள் வழங்கப்பட்டன. சென்னை மாணவி பி.காயத்திரி அறிவியலில் முதலிடமும், கணிதத்தில் 2-வது இடமும், ஆங் கிலத்தில் 3-வது இடமும் பெற்றுத் தேர்ச்சி பெற் றிருந்தார். அவருக்கு ரூ. 7 ஆயிரம் ரொக்கப் பரிசு வழங்கப்பட்டது.

பள்ளிக் கல்வி இயக்குநர் திரு வா. ஆ. சிவஞானம் அவர்கள் நன்றி கூறினார்.

**—நமது செய்தியாளர்**

# அரசின் அறிவிப்புகள் ஆக்கப்பணிகள்

★ சென்னை மற்றும் தமிழகத்தின் முக்கிய நகரங் களில் குடிசைமாற்று வாரியத்தால் கட்டப்பட்ட 50 ஆயிரம் அடுக்குமாடி வீடுகள் குடியிருப் போர்க்குச் சொந்தமாகும் என்று அரசு அறிவித் துள்ளது. (26.6.90)

★ சுதந்திரப் போராட்டத் தியாகியும் எழுத் தாளருமான திரு. வ.ரா.வின் துணைவியார் திருமதி புவனேஸ்வரி அம்மாளின் வேண்டு கோளை ஏற்று ஒவ்வொரு மாதமும் அவருக்கு ரூ.1,000/- உதவித்தொகை வழங்கிட மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் உத்தரவிட்டு, முதல் தவணையாக 1,000/- ரூபாயை 30.6.90 அன்று திரு. வ. ரா. வின் துணைவியாரிடம் நேரில் வழங்கினார்.

★ இராமநாதபுரம் மாவட்டத்தில் நடப்பு ஆண்டில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண உதவித் திட்டம் மற்றும் டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு உதவித் திட்டம் ஆகிய இரு திட்டங்களின்கீழ் ஏழைப் பெண்களுக்கு ரூ.29/- இலட்சம் நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது என்று அரசு அறிவித் துள்ளது. (27.6.90)

★ ஊராட்சி ஒன்றிய வளர்ச்சிப் பணிகளுக்கு ரூ.20/- கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அவற்றை நிறைவேற்றுவதற்கான உத்தரவு அதி காரிகளுக்குப் பிறப்பிக்கப்பட்டுள்ளது என்று மாண்புமிகு ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் திரு. கோ.சி. மணி அவர்கள் அறிவித்தார்.

★ குடிசைவாழ் மக்களின் நல்வாழ்வுக்காக அவர்கள் வீட்டுமனையையும் சொந்தமாக்குவதோடு அவர்கள் வீடு கட்டிக் கொள்ளவும் நிதியுதவி அளிக்கப்படு கிறது என்றும், 20 ஆயிரம் குடும்பங்களுக்கு பயன்பெறும் இத்திட்டத்திற்காக ரூ.20/- கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்றும் தமிழக அரசு அறி வித்துள்ளது. (27.6.90)

★ திண்டுக்கல்லில் ரூ.2.5 கோடி செலவில் சுற்றுப்பாலம் அமைக்கப்படும் என்றும், ரூ.68/- கோடி செலவில் சென்னையிலிருந்து மதுரைக்கு 4 வழிச்சாலை அமைக்கப்படும் என்றும், மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் திரு. துரைமுருகன் அவர்கள் அறிவித்தார்.

★ உணவு விடுதிகளில் ஏற்கனவே 15/- இலட்சம் ரூபாய்க்குமேல் வியாபாரம் நடந்தால் 5 சதவிகித வரி விதிக்கப்படும் என்று இருந்த நிலையை தற்போது மாற்றி, ரூ.18.25 இலட்சம் என வரம்பை நிர்ணயித்தது அரசு.

# இராஜாக்கமங்கலம் ஊராட்சி ஒன்றியம்

## 1989-90-ம் ஆண்டில் வளர்ச்சிப் பணிகளில் சாதனை

| | | எண்ணிக்கை | நிதி ஒதுக்கீடு ரூ. |
|---|---|---|---|
| 1. | தொகுப்பு வீடுகள் | 45 | 6,39,000 |
| 2. | ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம் | 102 | 25,34,500 |
| 3. | ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித்திட்டம் | 460 | 9,13,875 |
| 4. | பெருவிவசாய உற்பத்தித்திட்டம் | 45 | 40,031 |
| 5. | குடும்ப நலம் | 404 | |
| 6. | சிறு சேமிப்பு | | 1,11,82,370 |
| 7. | சாண எரிவாயுக் கலன் அமைக்கப்பட்டது | 45 | |
| 8. | சூளா அடுப்புகள் அமைக்கப்பட்டது | 250 | |
| 9. | மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித்திட்டம் | 27 | 1,35,000 |
| 10. | டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி மகப்பேறு உதவித்திட்டம் | 350 | 70,000 |
| 11. | சிறுபாசனத்திட்டம் | 2 | 48,832 |

மேலும் எமது நிர்வாகத்திலுள்ள காரவிளை தச்சுக்கூடத்தில் வீட்டிற்குத்தேவையானமரக்கட்டில், சோபாசெட் போன்ற மரச்சாமான்களும், அலுவலகங்களுக்கும், பள்ளிகளுக்கும் தேவையான மேசை, நாற்காலி, ரேக் போன்ற மரச்சாமான்களும் தேக்கு மரத்திலும் மற்றும் காட்டு மரங்களிலும் நேர்த்தியாகவும், உறுதியாகவும்கிராமக்கைவினைஞர்களைக் கொண்டு செய்து குறித்த நேரத்தில் விநியோகிக்கப்படும்.

**வே. செல்வசுதந்திரம்**
பெருந்தலைவர்

**சு. ராமையா**
ஆணையாளர்

**எஸ்.கி. சுகுமாரன்**
கூடுதல் வட்டார வளர்ச்சி அலுவலர்.

கிராமப்புறங்களில் வேலை வாய்ப்புத் தரும்

# காதி கிராப்ட்

'**காதி** கிராப்ட்' என்கிறபோது கதரும், கைவினைப் பொருள்களுமே நம் நினைவுக்கு வரும்.

அதுமட்டுமன்று, 'தரமான பொருள்களைத் தருகின்ற இடம்' என்பதும் நினைவுக்கு வரும்.

சென்னை பாரிமுனைக்கு அருகிலுள்ள குறளகத்தில் காட்சியளிப்பதுதான் 'காதிகிராப்ட்' என்னும் கதர் கிராமக் கைத்தொழில் பேரங்காடி.

தமிழ்நாடு கதர்கிராமக் கைத்தொழில் வாரியத்தின் ஓர் அங்கமாக இயங்கி வரும் இது, ஆசியாவிலேயே மிகப்பெரிய கதர் விற்பனைப் பேரங்காடி என்பது மட்டுமல்ல, பேரறிஞர் அண்ணா அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட சிறப்பும் உடையது.

இங்கே இல்லாத பொருள்களே இல்லை எனலாம். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை விரும்பி வாங்கும் பொருள்கள் இங்கே ஏராளம் உண்டு.

பெரும் பரப்பளவில் காட்சியளிக்கும் காதிகிராப்ட்டில், கதர், கைவினைப் பொருள்கள், சோப்பு, தேன், பாய், சந்தனப் பொருள்கள், பொம்மை, மட்பாண்டப் பொருள்கள், அறைகளுக்கு எழிலூட்டும் மேசை, நாற்காலி, பீரோ, கட்டில் முதலான பொருள்கள் இப்படிப் பல்வேறு பிரிவுகள் உள்ளன.

அதுமட்டுமா? நல்ல தரமான பட்டுச் சேலைகள் விற்பனைக் கூடமும் இங்கே இருக்கின்றது. காஞ்சிபுரம், கும்பகோணம் ஆகிய ஊர்களில் நவீன வடிவமைப்புகளில் தயாரிக்கப்பட்ட வண்ணப் பட்டுப் புடவைகளும் இங்கே விற்பனைக்கு உண்டு.

ஆண்டுதோறும் நவராத்திரிக் கொலுவை முன்னிட்டு, இங்கு நடத்தப்படும் 'பொம்மைக் கொலுக் கண்காட்சி' பிரசித்தி பெற்றதாகும்.

கண்ணையும் கருத்தையும் கவரும் இந்த வண்ணப் பொம்மைகளைக் காணக் கண்கோடி வேண்டும்.

தமிழ்நாட்டின் பல பகுதிகளிலிருந்து தருவிக்கப்படும் இந்த மண், காகித, மரப் பொம்மைகளுக்கு பொது மக்களிடையே நல்ல வரவேற்பு உள்ளது.

இந்தக் கைவினைப் பொருள்கள் தயாரிப்பு மூலம், கிராமத்தில் உள்ள ஏழை எளிய மக்கள் வேலை வாய்ப்புப் பெற்று வருகிறார்கள். இதற்கு அங்கு உள்ள கூட்டுறவுச் சங்கங்கள் அவர்களுக்குக் கை கொடுக்கின்றன.

திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்தில்தான் அதிகமான மட்பாண்ட உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உள்ளன. இதேபோல எண்ணெய் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களும் உள்ளன.

கதர் கிராமக் கைத்தொழில் வாரியத்தினால் தயாரிக்கப்படும் பொருள்கள் தரமானதாக உள்ளதால், அவற்றை மேலை நாட்டினரும் விரும்பி வாங்குகின்றனர்.

குறிப்பாக பனைத் தும்பு மேற்கு ஜெர்மனி, இங்கிலாந்து, இத்தாலி, பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன.

பனை ஓலைப் பொருட்கள் மட்டும் கடந்த மூன்று ஆண்டுகளில் ரூ.11 இலட்சத்துக்கு மேல் மேலை நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறது என்பது குறிப்பிடத்தக்கது.

பொதுவாக, ஆண்டுதோறும் ரூ.113.68 இலட்சத்துக்குக் குறையாமல் பனந்தும்புப் பொருள்கள் ஏற்றுமதியாகின்றன என்பது மகிழ்ச்சிக்குரிய செய்தியாகும்.

கதர்கிராமக் கைவினைப் பொருள்கள் விற்பனை குறித்து, காதிகிராப்ட் பொது மேலாளர் அவர்களைச் சந்தித்தபோது அவர் கூறினார்:

"சென்னை அண்ணா பன்னாட்டு முனையத்தில் உள்ள காதிகிராப்டின் மூலம், சிங்கப்பூர், மலேசியா போன்ற அயல்நாடுகளுக்குச் செல்லும் பயணிகள், கலையழகு மிக்க பொம்மைகளை விரும்பி வாங்கிச் செல்கின்றனர்.





''மேலை நாட்டவர்கள் இந்த அங்காடிக்கு வருகை தந்து, மண்-காகிதப் பொம்மைகளின் கலையழகை ரசித்திருக்கிறார்கள். கை வேலைப்பாடுடைய தஞ்சாவூர்த் தட்டுகள், தக்கையாலான கண் கவர் பொருட்கள் முதலானவை, அவர்களைக் கவர்கின்றன. கதர் மிக நேர்த்தியாக உள்ளது என்றும் அவர்கள் பாராட்டியுள்ளனர். அது மட்டுமல்ல, கதர்த் துணியை வாங்கியும் செல்கின்றனர்.

''மண்பாண்டத் தொழிலை நம்பியுள்ள ஏழை எளியவர்களுக்கு வாழ்வளிக்கும் முகத்தான், ஒவ்வொரு ஆண்டும் நவராத்திரியின் போது, குறைந்தது 40 நாட்கள் பொம்மைக் கொலுக் கண்காட்சி நடத்தி, தமிழ்நாடு முழுவதும் களிமண், காகிதப் பொம்மைகளைக் கொள்முதல் செய்து, நகர மக்களுக்கு வழங்குகிறோம்.

''ஓராண்டின் வருமானத்தில், 75 விழுக்காடு மதிப்புள்ள வருமானத்தை, இந்தக் கொலு கண்காட்சி மூலமே பொம்மைத் தொழிலாளர்கள் பெறுகிறார்கள் என்பதையும் மகிழ்ச்சியோடு குறிப்பிட வேண்டும். 1988-ஆம் ஆண்டு கொலு பொம்மைக் கண்காட்சியில் பொம்மைகள் ரூ.10 இலட்சத்திற்கும், 1989-ஆம் ஆண்டு ரூ.12.76 இலட்சத்திற்கும் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

''சாதாரணக் காலங்களில் கதருக்கு மட்டும் 15% சிறப்புத் தள்ளுபடி இங்கே தரப்படுகிறது. தீபாவளி, பொங்கல் பண்டிகைகளின் போது, அகில இந்தியக் கதராணைக்குழு மூலம் 25%, தமிழ்நாடு அரசு மூலம் 10%, கதர் நிறுவனங்கள் மூலம் 5% ஆக 40% கதர் பருத்தி ரகங்களுக்குச் சிறப்புத் தள்ளுபடி வழங்கப்படுகிறது. பாலியஸ்டருக்கு 25%-ம், பட்டுக்கு 20%-ம் சிறப்புத் தள்ளுபடி தரப்படுகிறது.

ஆரம்ப கட்டத்தில், சொற்ப விற்பனை மட்டுமே செய்யப்பட்டு வந்த பேரங்காடியில் தற்போது, இவ்விற்பனை பத்து மடங்கு உயாந்துள்ளது.

1980-81-இல் கதர் ரூ.40.01 இலட்சத்திற்கும், கிராமப் பொருட்கள் ரூ.61.43 இலட்சத்திற்கும், கைவினைப் பொருட்கள் ரூ.12.81 இலட்சத்திற்கும் ஆக மொத்தம் ரூ.115.25 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டன.

1989-90-இல் கதர் ரூ.556.61 இலட்சத்திற்கும், கிராமப் பொருட்கள் ரூ.384.27 இலட்சத்திற்கும், கைவினைப் பொருட்கள் ரூ.62.40 இலட்சத்திற்கும், ஆக மொத்தம் ரூ.1003.28 இலட்சத்திற்கு விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இந்தப் புள்ளி விவரங்களைக் கவனிக்கும்பொழுது, கடந்த ஒன்பது ஆண்டுகளில், இவ்வங்காடியின் விற்பனை ஆறு மடங்காக உயர்ந்துள்ளது என்பது தெளிவாகும்.

பம்பாய் கதர் கிராமத் தொழில் குழுவின் பொருளாதார உதவித் திட்டத்தின் கீழ், தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம், கதரங்காடியை 15 இலட்சம் ரூபாய்



# கதர் கிராமத் தொழிலில்

# மகளிருக்கு வேலைவாய்ப்பு

**த**மிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் உள்ளூரில் கிடைக்கும் வளங்களைப் பயன்படுத்தி சுய வேலை வாய்ப்பளிக்கிறது. கிராமப்புற ஏழை மக்களின் பொருளாதார வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்கத்துடன் வேலை வாய்ப்புகளை உருவாக்குகிறது. 1960 ஏப்ரல் திங்களிலிருந்து இவ்வாரியம் செயல்பட்டு வருகிறது.

கதர் கிராமத் தொழில் பணிகள், வாரியத்தின் துறை அலகுகள், கூட்டுறவு சங்கங்கள் மற்றும் கிராமங்களில் தனிநபர் அலகுகளை ஊக்குவிப்பது ஆகியவை மூலம் நிறைவேற்றப்படுகின்றன. பல்வேறு வேலை வாய்ப்பினை அளிக்கும் வகையில் மாவட்ட ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சி நிறுவனம்; ''தாட்கோ'' உருவாக்கும் திட்டங்கள் மற்றும் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்குத் தொடர்ச்சி மலை வளர்ச்சித் திட்டம், தொகுப்பு வளர்ச்சித் திட்டம், வறட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் ஆகியவற்றையும் கதர் வாரியம் ஒருங்கிணைந்து செயல்படுத்துகிறது. இத்திட்டங்கள் கிராமப் புறங்களில் வேலை வாய்ப்பை உருவாக்கும்.

### மகளிர்க்கு வேலை வாய்ப்பு

**த**மிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்தில் செயல்படுத்தப்படும் கதர் மற்றும் கிராமத் தொழில்கள் மூலம் மொத்தம் 8.60 இலட்சம் கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது. இதில் 3.31 நபர்கள் மகளிர் கைவினைஞர்களாவர். இவர்களில் 55,123 நபர்கள் ஆதிதிராவிடர் மற்றும் ஆதிதிராவிட பழங்குடியினர் ஆவர். இத்தொழில்களில் ஈடுபட்டுள்ள பெண்மணிகள் நாளொன்றுக்கு ஏறத்தாழ ரூ. 10 முதல் ரூ. 20 வரை ஊதியம் பெறுகின்றனர்.

661 கிராமிய நூற்பு உற்பத்தி நிலையங்கள் மூலம் மொத்தம் 34,066 நூற்பாளர்கள் பயன் பெற்றுள்ளார்கள். இதில் 24,013 மகளிர் பயனடைந்துள்ளனர். கதர், பட்டு மற்றும் பாலியஸ்டர் நெசவுத் தொழில் மூலம் 8,453 மகளிர் வேலை வாய்ப்பு பெற்றுள்ளனர். பனைத்தொழில் மூலம் வேலை வாய்ப்பு பெறும் 6.01 இலட்சம் நபர்களில், 2.66 இலட்சம் நபர்கள் மகளிர் ஆவர். உண்ணா எண்ணெய் மற்றும் சோப்புத் தொழில் மூலம் பயனடையும் 1,017 கைவினைஞர்களில் மகளிர் மட்டும் 254 பேர் ஆவர். பருப்பு மற்றும் தானியங்கள் பக்குவப்படுத்துதல் தொழிலில் ஈடுபட்டுள்ள 6,368 பேரில் மகளிர் பங்கு மட்டும் 2,039 ஆகும். மட்பாண்டத் தொழிலில் ஈடுபட்டுள்ள மொத்தம் 63,857 கைவினைஞர்களில் 32,125 பேர் பெண்கள். ஏறத்தாழ 50 சதம் பெண்கள் பயனடைகின்றார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

தோல் பதனிடுதல் மற்றும் தோல் பொருட்கள் தயாரித்தல் தொழிலில் மொத்தம் 26,220 மக்கள் ஈடுபட்டுள்ளார்கள். இவர்களில் 1,685 மகளிர் பயன் பெறுகின்றார்கள். வெல்லம் மற்றும் கந்தசாரி தொழில் மூலம் பயனடையும் மொத்த கைவினைஞர்கள் 3,881 நபர்கள். இவர்களில் 1,181 மகளிர் பயனடைகிறார்கள். தேனீ வளர்ப்புத் தொழிலில் 572 மகளிருக்குத் தேவையான மூலதனம் மற்றும் உதவிகள் அளித்து பயன் பெறச் செய்யப்பட்டுள்ளது.

கைமுறைக் காகிதம் தயாரித்தலில் மொத்தம் 1,004 நபர்களில், 34 மகளிர் பயன் பெற்றுள்ளார்கள். நார் மற்றும் பாய்த் தொழிலில் ஈடுபட்டுள்ள 14,673 கைவினைஞர்களில் 1,315 மகளிர் பயனடைந்து வருகின்றார்கள். பழப்பக்குவப் படுத்துதல் தொழிலில் ஈடுபட்டுள்ள 365 நபர்களில் 18 மகளிர் பயனடைந்துள்ளார்கள்.

சுண்ணாம்புத் தொழிலில் ஈடுபட்டுள்ள 11,002 நபர்களில் 685 மகளிர் பயனடைந்துள்ளார்கள். பிரம்பு மற்றும் மூங்கில் தொழிலில் 8,440 நபர்கள் பயனடைந்துள்ளார்கள். இவர்களில் 465 மகளிர் பயனடைந்துள்ளார்கள்.

பொதுமக்களின் வசதிக்காகவும், அங்காடி நவீன மெருகு பெற்று பொலிவு பெறுவதற்காகவும் செலவு செய்யப்பட்டுள்ளது.

இதன் காரணமாக சென்னை மாநகரத்திலேயே அழகு மிளிரும் அங்காடியாகத் திகழ்ந்து வருவதுடன், அயல் நாட்டினரையும் கவரக் கூடிய வகையில் இந்த அங்காடி இருந்து வருகிறது. பொது மக்கள், தமது நண்பர்கள் திருமணம் மற்றும் இதர விழாக்களுக்குத் தேவைப்படும் பரிசுப் பொருட்களையும் வாங்கிச் செல் கிறார்கள். குடும்பத்திற்குத் தேவை யான சோப்பு, எண்ணெய், அப்பளம், ஊறுகாய், பழரசம், ரசப்பொடி, சாம்பார்ப் பொடி, இட்லிப்பொடி முதலியன இங்கே தரமாகவும் விலை குறைவாகவும் இருப்பதால் அங்காடி யில் கூட்டம் இருந்து கொண்டே இருக்கிறது.

'காதிகிராப்ட்' காலணிகள் மிகவும் சிறப்பு வாய்ந்தவைகளுள் ஒன்றாகும். அசல் இலவம் பஞ்சி னால் ஆன மெத்தை மற்றும் தலை யணை முதலியவைகளும் பொது மக் களால் பெரிதும் விரும்பி வாங்கப் படுகின்றன.

ஒரு மகிழ்ச்சியான செய்தி—

1990-ஆம் ஆண்டும் கதரங்காடி யில், கொலு பொம்மைக் கண் காட்சி, 20.8.90-லிருந்து மிகச் சிறப்பாகத் தொடங்க உள்ளது!

—பி.வி.கிரி



# நூல் நயம்

### அண்ணாவின் மனித நேயம்

**தொகுப்பு: மூவேந்தர் முத்து**
**வெளியீடு:**

பூவழகி பதிப்பகம்,
29/2 சீனிவாசப் பெருமாள்
சன்னதி தெரு,
ராயப்பேட்டை, சென்னை-600 014.

**விலை:ரூ.7 பக்கம்:72**

பேரறிஞர் அண்ணா அவர்களிடம் குடிகொண்டிருந்த மனித நேய உணர்வு களைக் குறித்து கவிஞர் கருணானந்தம் தொலைக்காட்சியிலும் வானொலியிலும் ஆற்றியுள்ள உரைகள், டாக்டர் சி.என்.ஏ. பரிமளம் மற்றும் மா.செங்குட்டுவன் ஆகியோர் எழுதிய கட்டுரைகள் ஆகிய வற்றின் தொகுப்பே இந்நூல்.

அண்ணாவிடம் மண்டிக் கிடந்த மனித நேய உணர்வுகள் சான்றுகள் காட்டி நிறுவப்பட்டுள்ளன. பல்வேறு நிகழ்ச்சிகளின் வாயிலாக அண்ணாவின் மனிதநேயப் பாங்கு எடுத்துக் காட்டப் பட்டுள்ளது.

### ஒளியும் நிழலும்

**ஆசிரியர்: கவிஞர் மாணிக்கம்**
**(எழிற்பித்தன்)**
**வெளியீடு:**

நேயமை
9, சின்னப்ப தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை-600 005.

விலை:ரூ.9 பக்கம்:93

மரபுக் கவிதைகளும் புதுக் கவிதை களும் கொண்ட கதம்ப மாலையாகத் திகழும் இந்தக் கவிதைத் தொகுப்பில் உள்ளத்தைத் தொடும் கவிதைகள் பற்பல ஒளிவீசுகின்றன. கற்பனை வளமும் கருத்துச் செறிவும் கவிதைகளில் ததும்பி வழிகின்றன.

கண்ணீர், புன்னகை, நம்பிக்கை ஆகியவற்றிற்கு நூலாசிரியர் தந்திருக்கும் விளக்கம் பாராட்டுதற்குரியது. அழியாத அடிச்சுவடுகள் என்னும் தலைப்பின் மூலம் பாரதி, பாரதிதாசன் போன்ற பெருங்கவிஞர்களைக் குறித்து அழியாத கவிதைகளைத் தீட்டியுள்ளார் நூலாசிரியர். இனிய, எளிய, ஆழமான நடை நம்மைக் கவர்கிறது.

—எஸ்.எஸ். சுந்தரம்

### கவிதைச் செல்வம்

**ஆசிரியர்: டாக்டர் தூ. இன்னாசி**
**வெளியீடு:**

சென்னைப் பல்கலைக் கழகம்,
சென்னை-600 005.

விலை:ரூ.25 பக்கம்:136

கிறிஸ்துவ சமயம் தொடர்பான இலக்கியங்கள் பலவற்றைக் குறித்த தகவல்களின் தொகுப்பே இந்நூல் மொத்தத்தில் 471 நூல்களைக் குறித்த விவரங்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

அந்தாதி, அம்மானை, ஆற்றுப்படை போன்ற பலவகை இலக்கியங்களுக்குரிய இலக்கணத்தையும் நூலாசிரியர் விளக்கி யுள்ளார்.

கிறிஸ்துவ சமயம் தொடர்பாக அம்மானை வகையில் மட்டுமே 83 நூல்கள் வெளிவந்துள்ளன என்பதை அறியும்போது வியப்பு அலை மோது கிறது. பல்வேறு நூலகங்களுக்கெல்லாம் சென்று (வெளிநாடுகளுக்கும் சென்று) நூல்களைக் குறித்த செய்திகளைத் தேடித் திரட்டியுள்ளார் நூலாசிரியர். அவரது கடின உழைப்பு தெளிவாகத் தெரிகிறது.

—தமிழ்ப்பித்தன்

### ஒலிக்க மறுத்த தண்டோராக்கள்

**ஆசிரியர்: ஆ. தனஞ்செயன்**
**வெளியீடு:**

உதயம், கடற்கரைச் சாலை,
காவிரிப்பூம்பட்டினம்,
பூம்புகார் - 609 105.

விலை: ரூ.12 பக்கம்:84

புதுக் கவிதைகள் தொகுப்பு. பல் வேறு தலைப்புகளில் பின்னப்பட்டுள்ள இக்கவிதைகள், இன்றைய சமுதாயத்தைப் படம் பிடித்துக் காட்டுகின்றன. ஆசிரி யரின் சிந்தனைப் பிழிவுகள் பல கவிதை களில் பளிச்சிடுகின்றன.

### அரிய தலைவி
### அன்னை இந்திரா

**ஆசிரியர்: டாக்டர் சோ. சேசாசலம்**
**வெளியீடு:**

ஸ்ரீ நிலையம்,
2, முத்துக் கிருஷ்ணன் தெரு,
சென்னை-600 017.

விலை: ரூ.10 பக்கம்:92

முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அவர்களின் வாழ்க்கைக் குறிப்புகளுடன், அவரது கருத்துரைகளும் இணைந்த தொகுப்பு நூல். அன்னாரைப் பற்றி அறிந்து கொள்ள இந்நூல் உதவும்.

### நீரிழிவுக்குத் தமிழ் மருந்துகள்

**ஆசிரியர்: டாக்டர் திருமலை நடராசன்**
**வெளியீடு:**

தமிழ்ச் செல்வி நிலையம்
43, சித்திரைக் குளம்.
வடக்குத் தெரு, சென்னை-600 004.

விலை: ரூ.9 பக்கம்:96

மனிதனைத் துன்பத்துக்குள்ளாக்கும் நோய்களுள் நீரிழிவு நோயும் ஒன்று.

இந்நோயின் அறிகுறி, ஆரம்பத்தில் அதனைப் போக்கும் முறை, நோய் முற்றிய வர்கள், மற்றும் பாரம்பரிய நீரிழிவு நோயுள்ளவர்கள் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகள் முதலான ஆலோசனை களைக் கூறும் அரிய மருத்துவ நூல்.

—பி.வி.ஜி.

### இஞ்சி-எலுமிச்சை-தேன்
### எளிய வைத்தியம்

**ஆசிரியர்: டாக்டர்.திருமலை நடராசன்**
**வெளியீடு:**

தமிழ்ச்செல்வி நிலையம்,
43, சித்திரைக்குளம் வடக்குத்தெரு,
மயிலாப்பூர், சென்னை-600 004.

விலை:ரூ.5 பக்கம்:72

நூலாசிரியர் - இஞ்சி, எலுமிச்சை, தேன் ஆகியவற்றை உணவில் எவ்வா றெல்லாம் சேர்த்துக் கொண்டால் எப்படிப் பட்ட நோயெல்லாம் விலகும் என்பதைப் பாமர மக்களும் படித்துப் பயன்பெறும் வண்ணம் இந்த நூலில் எடுத்து விளக்கி யிருக்கிறார். அருமையான நூல் இது.

—'இந்திரன்'

### இந்து சமய நெறி

**ஆசிரியர்: தி. தயானந்தன் பிரான்சிஸ்**
**வெளியீடு:**

கிறிஸ்தவ இலக்கியச் சங்கம்,
பூங்கா நகர்,
சென்னை - 600 003.

**விலை: ரூ.15/- பக்கம்:101**

இந்து சமயம் என்ற பெயர் எப்படித் தோன்றியது என்ற விளக்கத்தோடு ஆரம்ப மாகும் இந்நூல், இந்து சமயம் பற்றிய சிறப்பியல்புகளைக் கூறுகிறது. இது தொடர்பாக, மேனாட்டு அறிஞர்கள் பலரின் கருத்துக்களும் தேவையான இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எளிய, இனிய நடையில் எழுதப் பட்டுள்ள இந்நூல், இச்சமயத்தைப் பற்றி அறிந்து கொள்ள விரும்புவோர்க்கு சிறந்த கையேடாக விளங்குகிறது.

—குமரர்.

**நூல் நிலையம் இல்லாத ஊரும் ஓர் ஊரா? படியுங்கள்! படியுங்கள்! படித்துக் கொண்டே இருங்கள்.**

-லெனின்

பயன் அடைந்தோர் பகர்வன:

# மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத் திருமண உதவித் திட்டம்:

# வாழ்வில் ஒளி பிறந்தது!





மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுத்திருமண நிதி உதவித்திட்டத்திற்கு, இராமநாதபுரம் மாவட்டத்தில் நடப்பு நிதியாண்டில் ரூ.20 இலட்சம் அரசு ஒதுக்கீடு செய்துள்ளது. இந்தத் தொகை தலா ஐயாயிரம் வீதம், நானூறு ஏழைப் பெண்களுக்கு வழங்கப்படுகிறது. இதுவரை இராமநாதபுரம் மாவட்டத்தில் 54 பெண்களுக்கு 2 இலட்சத்து 70 ஆயிரம் ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

திருமண உதவி பெற்ற இராமநாதபுரம் வடக்கு புதுத்தெருவைச் சேர்ந்த திருமதி வாசுகியிடம் இதுபற்றிக் கேட்டபோது அவர் கூறினார்: ''என் தந்தை ஜோதிடம் பார்ப்பவர். அதில் வரும் வருமானத்தில் நாங்கள் வாழ்ந்து வருகிறோம். என் கூடப்பிறந்தவர்கள் மொத்தம் 7 பேர். இதில் பெண்கள் 4 பேர். என்னுடைய திருமணம் நிச்சயமானவுடன், திருமண உதவித் தொகையாக அரசு வழங்கிய ரூ. 5,000 மூலம், என் திருமணம் நல்லபடியாக நடந்தது.''

கடலாடி ஊராட்சி ஒன்றியம், நரிப்பையூரைச் சேர்ந்த திருமதி தனம் அவர்களிடம் திருமண உதவிபற்றிக் கேட்டபோது, ''என் தந்தை கூலி வேலை செய்பவர். என்னுடைய திருமணத்திற்காக, வீட்டில் உள்ள பொருள்களை அடகு வைத்துத் திருமணம் செய்யலாம் என்று எண்ணிக் கொண்டிருந்த நேரத்தில், பக்கத்து வீட்டு ஆசிரியர் ஒருவர் சொன்னதன் பேரில், என் தந்தை சமூக நலத்துறையின் மூலமாக ரூ.5 ஆயிரம் பெற்று என் திருமணத்தை நடத்தினார். இதனால் என் வாழ்வில் ஒளிபிறந்தது.

தமிழக முதல்வர் அவர்கள் ஏழைகளின் கண்ணீரைத் துடைப்பதற்காகக் கொண்டு வந்த இந்தத் திட்டத்தினால் என் போன்ற ஏழைகள் பயன் அடைந்துள்ளார்கள். தமிழக அரசுக்கு எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.'' என்றார்.

**வி.ஜி. பிரசாத்**
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
இராமநாதபுரம்

# தோவாளை ஊராட்சி ஒன்றியம், கன்னியாகுமரி மாவட்டம்

ஜவகர் வேலை வாய்ப்புத் திட்டத்தின் கீழ் இவ்வொன்றியத்தில் எடுத்துச் செய்யப்பட்ட வேலைகள் விவரம்

| வ.எண். | வேலையின் விவரம் | எண்ணிக்கை | மொத்த மதிப்பீடு, ரூ. |
|---|---|---|---|
| 1. | தொகுதி வீடுகள் | 150 | 17,71,057 |
| 2. | ரோடு மற்றும் கட்டட வேலைகள் | 59 | 4,18950 |
| 3. | குளம் மேம்பாடு | 22 | 2,09,085 |
| 4. | இதர வேலைகள் | 38 | 16,91,207 |
| 5. | சமூகக் காடு வளர்ப்பு | - | 2,00,000 |
| | மொத்தம் | 269 | 42,90,299 |

தோவாளை ஊராட்சி ஒன்றியத்தின் கீழ் இயங்கும் தச்சுப் பட்டறையில் உத்தரவின் பேரில் தேக்கு, ஈட்டி, மரங்களினால் அனைத்து வீட்டு உபயோகத்திற்கான சாதனங்கள் நன்முறையில் உரிய நேரத்தில் செய்து கொடுக்கப்படும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**என். சிதம்பரநாதபிள்ளை**
தலைவர்
தோவாளை ஊராட்சி
ஒன்றியம்

**சே. வேலப்பன்**
ஆணையாளர்
தோவாளை ஊராட்சி
ஒன்றியம்

**ஸ்ரீ. நம்பிநாதபிள்ளை**
கூடுதல் வட்டாரவளர்ச்சி
அலுவலர்
தோவாளை ஊராட்சி
ஒன்றியம்

# மாவட்டச் செய்திகள்

## செங்கை-அண்ணா மாவட்டத்தில்

ஊரக வளர்ச்சித் திட்டப் பணிகள் செயலாக்குவதிலும், வறட்சி நிவாரணப் பணிகள், ஊரகக் குடிநீர்த் திட்டப்பணிகள் செயல்படுத்துவதிலும் 1989-90-ஆம் ஆண்டில் மாநில அளவில் செங்கை-அண்ணா மாவட்டம் முதலிடம் வகிக்கிறது.

ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.373.88 இலட்சம் செலவழிக்கப்பட்டு, 13,782- ஏழை எளியவர்கள் பயனடைந்துள்ளார்கள். இவர்களுக்கு மானியமாக வழங்கப்பட்ட தொகை ரூ.286.22 இலட்சம்.

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் முடிக்கப்பட்ட வேலைகள் 10,828, செலவழிக்கப்பட்ட தொகை ரூ.1,886.50 இலட்சம். இத்திட்டத்தின் கீழ் ஆதிதிராவிடர்களுக்கு 4,276- தொகுப்பு வீடுகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. மேலும் ஆதிதிராவிடர்களுக்கு 330- ஜீவன் தாரா கிணறுகளும் கட்டப்பட்டுள்ளன.

சமூகக் காடுகள் வளர்ப்புத் திட்டத்தின்கீழ் 1,748.60 எக்டேர் நிலப்பரப்பில் 33.85 இலட்சம் மரக்கன்றுகள் நடப்பட்டுள்ளன. செலவழிக்கப்பட்ட தொகை ரூ.84.75 இலட்சம்.

வேளாண்மைப் பெருநோக்குத் திட்டத்தின்கீழ் 1073- சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு ரூ.54.98 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.

இளைஞர்களுக்கான சுயவேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் ரூ.26.88- இலட்சம் செலவழிக்கப்பட்டு 1,009- இளைஞர்களுக்குச் சுயமாகத் தொழில் தொடங்கப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தில் 718-சாண எரி வாயுக் கலன்களும் 6,750- புகையில்லா அடுப்புகளும் அமைக்கப்பட்டுள்ளன.

ஊரகக் குடிநீர்த் திட்டத்தின்கீழ் ரூ.16.19- இலட்சம் செலவில் 4,661- கைப்பம்புகளும், 1,971- விசைப்பம்புகளும் அமைக்கப்பட்டுள்ளன.

வறட்சி நிவாரணத் திட்டத்தின் கீழ், ரூ.35.74- இலட்சம் செலவழிக்கப்பட்டு 1,594- பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

— பா. நாராயணமூர்த்தி
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,**
**செங்கை-அண்ணா மாவட்டம்.**

## திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டத்தில்

திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்டம், வந்தவாசி ஊராட்சி ஒன்றியத்தில் ஊரக மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ், 1988-89-ஆம் ஆண்டில் பல்வேறு பொருட்கள் தயாரிக்கும் 10 டோக்கரா மையங்கள் துவங்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன. அவற்றில் கீழ்க்கொவளவேடு சாக்குக் கட்டிகள் உற்பத்தி செய்யும் டோக்கர சங்கமும் ஒன்றாகும்.

இச்சங்கத்தில் மொத்தம் 15 பெண் அங்கத்தினர்கள் உள்ளனர். அவர்களில் ஆறு ஆதிதிராவிடர் வகுப்பைச் சார்ந்தவர்களும் அடங்குவர். இச்சங்கத்தில் முதல் தரமான மூலப்பொருள்களைக் கொண்டு, நன்கு பயிற்சி பெற்ற மகளிர்களால் தயாரிக்கப்பெறும் சாக்குக்கட்டிகள் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

வெள்ளை சாக்குக் கட்டிகள் ஒரு குரோஸ் அடங்கிய பெட்டி ஒன்று ரூ.3.25-க்கும், வண்ணச் சாக்குக் கட்டிகள் ஒரு குரோஸ் அடங்கிய பெட்டி ஒன்று ரூ.5.50-க்கும் விற்கப்படுகின்றன.

ஒருவர் ஒரு நாளைக்குச் சுமார் நூறு முதல் நூற்றைம்பது குரோஸ் வரை சாக்குகள் மோல்டில் தயாரிக்கின்றார். மற்ற நால்வர் சாக்கு உலர்த்துதல், பேக்கிங் பெட்டிகள் தயாரித்தல், சாக்கு அடுக்குதல், பீஸ் பேப்பர் லேபிள் ஒட்டுதல், பேக்கிங் செய்தல் முதலிய பணிகளைக் கவனிக்கின்றனர். இம்மாதிரி மூன்று பிரிவுகளில் தலா ஐந்து நபர்கள் வீதம் பணி புரிகின்றனர். ஒரு பெண், நாள் ஒன்றுக்குச் சுமார் ரூ.10-லிருந்து ரூ.25 வரை ஊதியமாகப் பெறுகிறார். இம்மாதிரி 15 குடும்பங்கள் இச்சங்கத்தின் மூலம் பயன்பெற்று வருகின்றன.

செய்யாறு கோட்ட வளர்ச்சி அலுவலர், மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவன திட்ட அலுவலர், திருவண்ணாமலை சம்புவராயர் மாவட்ட ஆட்சித் தலைவர் ஆகியோர் இந்தச் சங்கத்தைப் பார்வையிட்டு இதன் வளர்ச்சியை வெகுவாகப் பாராட்டியுள்ளனர்.

கல்வி நிலையங்கள் மற்றும் தனியார் தேவைகளுக்கு இச்சங்கச் சாக்குக்கட்டிகளை வாங்கிப் பயன்படுத்து மாறு திருவண்ணாமலை, சம்புவராயர் மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனப் பெருந்தலைவர் அவர்கள் பரிந்துரை செய்துள்ளார்கள். வந்தவாசி நகரில் விற்பனை மையம் துவங்கப்பட்டு, விற்பனையை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

சாக்குக்கட்டிகள் தேவைக்குத் தொடர்பு கொள்ளவேண்டியமுகவரி:

- அமைப்பாளர்,
  டோக்கரா சாக்குக் கட்டி
  உற்பத்திச் சங்கம்
  கீழ்க்கொவளவேடு அஞ்சல் 604 404
- வட்டார வளர்ச்சி அலுவலர்,
  வந்தவாசி - 604408.

# பெரியார் மாவட்டத்தில்...

## முப்பெரும் விழா

பெரியார் மாவட்டம் தாளவாடி மலையில், தொகுப்பு வீடுகள் திறப்பு விழா, அரசு சாதனை விளக்க முகாம் கண்காட்சி, ஆதி திராவிடர் மாணவியர் விடுதித் திறப்பு விழா ஆகிய முப்பெரும் விழா 5-6-90 அன்று நடைபெற்றது.

மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் திருமதி. சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் இவ்விழாவில் கலந்து கொண்டு, நலிவுற்ற மக்களுக்கான நல்வாழ்வுத் திட்டங்களின் அடிப்படையில் அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

தாளவாடி ஆரம்பச் சுகாதார நிலைய வளாகத்தில், அரசு சாதனை விளக்க முகாம் கண்காட்சி நடைபெற்றது. இக்கண்காட்சியில் செய்தி-மக்கள் தொடர்புத் துறை, வருவாய்த் துறை, வேளாண்மைத் துறை, கூட்டுறவுத் துறை, சமூகநலத் துறை, மக்கள் நல்வாழ்வுத்துறை, வேலைவாய்ப்புத் துறை, பட்டு வளர்ச்சித் துறை மற்றும் பால்வளத் துறை முதலான 12 அரசுத் துறைகள் இடம் பெற்றிருந்தன.

பாங்குற அமைக்கப்பட்டிருந்த இக்கண்காட்சியினை மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத்தொழில் துறை அமைச்சர் திருமதி. சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் திறந்து வைத்தார்.

ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் மாவல்லம் என்ற கிராமத்தில் ரூ.2.21 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 20 தொகுப்பு வீடுகளையும் மெட்டல்வாடி கிராமத்தில் ரூ.3.54 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட 32 தொகுப்பு வீடுகளையும் ஆக ரூ.5.75 மதிப்பீட்டில் கட்டப்பட்ட 52 தொகுப்பு வீடுகளை மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத்தொழில் துறை அமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

ரூ.13 இலட்சம் மதிப்பீட்டில் 41 ஆதிதிராவிட மாணவியர்கள் தங்குவதற்கான வசதிகளைக் கொண்ட ஆதிதிராவிடர் மாணவியர் விடுதியினையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இம்முப்பெரும் விழாவிற்குப் பெரியார் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. வி.கே. சுப்புராஜ், இ.ஆ.ப., அவர்கள் தலைமை வகித்தார். சத்தியமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் திரு. டி.கே. சுப்பிரமணியம் அவர்கள் முன்னிலை வகித்தார்.

முப்பெரும் விழாவில் அரசுத் திட்டங்களைத் துவக்கி வைத்து மாண்புமிகு சமூகநலம் மற்றும் ஊரகத்தொழில்துறை அமைச்சர் திருமதி. சுப்புலட்சுமி ஜெகதீசன் அவர்கள் உரையாற்றுகையில், ''பல்வேறு அரசுத்துறைகள் அரசின் சாதனை விளக்க முகாம் கண்காட்சியில் அரங்குகளைச் சிறப்புற அமைத்துள்ளன. குடிநீர்ப் பிரச்சனையைத் தீர்க்க, கடந்த ஆண்டில் 5 ஆயிரம் ஆழ்குழாய்க் கிணறுகள் போடப்பட்டன. 1500 மக்கள்தொகை கொண்ட அனைத்துக் கிராமங்களுக்கும் மேல்நிலை குடிநீர்த்தொட்டி அமைக்க முதல்வர் அவர்கள் உத்திரவிட்டுள்ளார்கள். இதேபோல் 1500-க்கும் மேற்பட்ட மக்கள்தொகை கொண்ட கிராமங்களுக்கும் போக்குவரத்து வசதிகள் செய்து கொடுக்கப்படும். 500 மக்கள் தொகை உள்ள பகுதிக்கு ஓராசிரியர் பள்ளி அமைக்கப்படும். கடந்த ஆண்டு 500 ஆசிரியர்கள் நியமனம் செய்யப்பட்டனர். கல்விக்காக 900 கோடி ரூபாய் செலவிடப்பட்டது. தற்போது 1500 கோடி ரூபாய் கல்விக்காகச் செலவிட ஒதுக்கப்பட்டுள்ளது.'' என்றார்.

இவ்விழாவில் 50 பேர்களுக்கு ரூ.1.05 இலட்சம் மதிப்புள்ள அரசு நலத்திட்ட உதவிகளையும், 158 வீட்டுமனைப் பட்டாக்களையும் 150 ஏழைக் குழந்தைகளுக்கு இலவசச் சீருடைகளையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் வழங்கினார்.

விழாவிற்கு வந்திருந்தோரை தாளவாடி ஊராட்சி ஒன்றியத் தலைவர் திரு. சி. ராமண்ணா வரவேற்க, தாளவாடி ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் திரு. வ.தே. பழநிசாமி நன்றி கூறினார்.

—கிருபால்தாஸ் ஜான்
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்
பெரியார் மாவட்டம்





# மதுரை மாவட்டத்தில்

### மதுரை சர்க்கரை ஆலை

**ம**துரை சர்க்கரை ஆலை, மதுரை மாவட்டம், வாடிப்பட்டி தாலுகா, பாண்டியராஜபுரத்தில் உள்ளது. ஆலையின் மொத்தப் பரப்பு சுமார் 70 ஏக்கர் ஆகும்.

இவ்வாலை 26.12.1983 முதல் அரசுடைமை ஆக்கப்பட்டு தமிழ்நாடு சர்க்கரைக் கழகத்தின் நிர்வாகத்தில் ஒரு அலகாக, சிறப்புடன் இயங்கி வருகிறது. அதற்கு முன்பு இவ்வாலை தனியார் நிர்வாகத்தினரிடம் இருந்து வந்தது.

இவ்வாலை தனியார் துறையினரிடம் இருந்தபொழுது ஒரு நாளைய அரவைத்திறன் 800 டன்களாகும். அரசுடைமை ஆக்கப்பட்ட பின்பு, அதாவது 26.12.1983-க்குப் பிறகு, அரவைத் திறன் நாளொன்றுக்கு 800 டன்களிலிருந்து 1,250 டன்களாக உயர்த்தப்பட்டது.

ஆலைப்பகுதியிலேயே ஆலை அரவைக்குப் போதுமான கரும்பு கிடைப்பதற்குக் கரும்பு அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு, 1988-89 அரவை ஆண்டில் நாற்றங்கால் மானியமாக ரூ.4.08 இலட்சமும், ரக மானியமாக ரூ.20.10 இலட்சமும் வழங்கப்பட்டன. நீர்ப்பாசன வசதியை அதிகப்படுத்த ஏதுவாக, கிணறு ஒன்றுக்கு ரூ.5,000 வீதம் 525 கிணறுகளுக்கு ரூ.26.25 இலட்சமும், புதிய கிணறு அமைக்க கிணறு ஒன்றுக்கு ரூ.15,000 வீதம் 50 கிணறுகளுக்கு ரூ.7.50 இலட்சமும் மத்திய அரசின் சர்க்கரை அபிவிருத்தி நிதியிலிருந்து 8 சத வட்டியில் வழங்கப்பட்டன.

இரண்டாவது தவணை, சர்க்கரை அபிவிருத்தி நிதியிலிருந்து கிணறு ஒன்றுக்கு ரூ.5,000 வீதம் 200 கிணறுகளுக்கு ரூ.10 இலட்சம் வழங்கப்பட்டது. மேலும் கிணறு ஒன்றுக்கு ரூ.10,000 வீதம் 180 கிணறுகளுக்கு ரூ.18 இலட்சம் வழங்கப்பட்டது. புதிய கிணறு அமைக்க, கிணறு ஒன்றுக்கு ரூ.15,000 வீதம் 9 கிணறுகளுக்கும், ரூ.20,000 வீதம் 1 கிணற்றுக்கும், ரூ.25,000 வீதம் 2 கிணறுகளுக்கும் கடன் வழங்கப்பட்டுள்ளது.

இதுபோன்று கிணற்றுக் கடன் அடுத்த ஆண்டிலும் குறைந்த வட்டியில் வழங்க ரூ.34 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வருகிற அரவைப் பருவத்திற்கு இதுவரையிலும் 7,730 ஏக்கர் கரும்பு பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் 1,600 ஏக்கர் வரை கரும்பு பதிவு செய்ய இயலும் என எதிர்பார்க்கப்படுகிறது. அதற்கான சூழ்நிலைகள் நன்கு உள்ளன. அடுத்த அரவைப் பருவத்தில் இவ்வாலையின் அரவைக்குத் தேவையான 2.15 இலட்சம் டன் கரும்பை ஆலைப் பகுதியிலேயே பெற்று தன்னிறைவு அடையும் என்பதில் சிறிதும் ஐயமில்லை.

இவ்வாலைக்கு கரும்பு பதிவு செய்து சப்ளை செய்யும் விவசாயிகள் 'கரும்பு உற்பத்தியாளர் சங்கம்' என்ற பெயரில் சங்கம் ஒன்று அமைத்து இயங்கி வருகின்றனர். அச்சங்கம் இவ்வாலையின் நிர்வாகத்திற்கு நேசக்கரம் நீட்டி முழு ஒத்துழைப்பும் நல்கி வருகிறது.

இவ்வாலை அரசுடைமையாக்கப்படுவதற்கு முன்பு 430 ஊழியர்களும், 148 அற்றைக் கூலிகளும் பதிவேடுகளில் இருந்தனர். அப்பொழுது அரவைக் காலங்களில் மாதம் சுமார் ரூபாய் 3.30 இலட்சமும், அரவை இல்லாத காலத்தில் சுமார் ரூ.1.10 இலட்சமும் சம்பளமாக வழங்கப்பட்டு வந்தன. ஆலையின் அரவைத் திறனுக்கு ஏற்ப தற்பொழுது 615 ஊழியர்களும், 445 அற்றைக் கூலிகளும் பதிவேட்டில் உள்ளனர்.

தற்பொழுது அரவைக் காலத்தில் மாதம் ரூ.10.67 இலட்சமும், அரவையில்லாக் காலத்தில் ரூ.6.60 இலட்சமும் சம்பளமாக வழங்கப்பட்டு வருகின்றன. அரசுடைமையாக்கப்பட்ட பின்பு, ஏனைய கூட்டுறவுப் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் வழங்கப்பட்டு வரும் அனைத்துச் சலுகைகளும் இவ்வாலையிலும் விரிவாக்கப்பட்டு வழங்கப்பட்டு வருகின்றன.

**பாவேந்தர் நூற்றாண்டு:**



**ஊழியஞ்செய் தமிழுக்குத்**
**துறைதோறும் துறைதோறும்**
**உணர்ச்சி கொண்டே**

இங்குப் பணிபுரியும் அனைத்து ஊழியர்களும் மற்றும் தொழிலாளர்களும் நிர்வாகத்துக்கு முழு ஒத்துழைப்பு நல்கி இரவு பகல் பாராது இவ்வாலை நன்கு இயங்கி வரநதங்களின் உழைப்பினை நல்கி வருவது மிகவும் போற்றுவதற்கு உரியது. நிர்வாகமும் எல்லா ஊழியர்களுக்கும் அவர்களுக்கு வேண்டிய சலுகை மற்றும் இதரக் கோரிக்கைகளை அவ்வப்போது செய்து தனது கடமையினை நிறைவேற்றி வருகிறது.

இவ்வாலை ஊழியர்கள், கரும்பு விவசாயிகள் மற்றும் இவ்வாலை வட்டாரத்திலுள்ள மற்ற குழந்தைகளின் நலன் கருதி, இங்கு நர்ஸரி பள்ளி ஒன்றும் மேல்நிலைப்பள்ளி ஒன்றும் இயங்கி வருகின்றன. குழந்தைகள் மற்றும் மாணவ, மாணவியரின் போக்குவரத்திற்குப் பள்ளிப் பேருந்தும் இயக்கப்படுகிறது.

இவ்வாலையினை அரசு எடுத்துக் கொண்ட பின்பு, விரிவாக்கப் பணிகளுக்காக ரூ.4.85 கோடி செலவு செய்யப்பட்டு, மேலே குறிப்பிட்ட நிறுவனங்களுக்கு கடன் கொடுத்தது போக, தற்பொழுது தொழிலாளர்களின் குடியிருப்பிற்காக ரூ.21.20 இலட்சம் செலவில் 24 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. மேலும் ரூ.12 இலட்சம் செலவில் நிர்வாக அலுவலகங்கள் கட்டுவதற்கான பூர்வாங்க வேலைகள் தொடங்கப்பட்டுள்ளன. அதோடல்லாமல் ரூ.75 இலட்சம் செலவில் மேலும் குடியிருப்புகள், பள்ளிக் கட்டடம், உணவு விடுதி கட்டுவதற்கு ஆயத்த வேலைகள் நடைபெற்று வருகின்றன.

**– ரெ. இராவணன்,**
**செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,**
**மதுரை மாவட்டம்.**

# கன்னியாகுமரி மாவட்டத்தில்

சுமார் 2,700 ஆண்டுகளுக்கு முன், அதங்கோட்டாசான் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த அதங்கோட்டில் வாழ்ந்ததாகக் கருதப் படுகிறது. பாண்டியன் அவையில் தொல்காப்பிய அரங்கேற்றத்திற்குத் தலைமை வகித்த இப்பெரும் புலவர், சிறந்த வில்லிசை எழுதும் கவிஞராகவும், உடற்கூறு தத்துவ சாஸ்திரங்களின் முன்னோடியாகவும், சோதிடக் கலையில் ஞானம் கொண்டவராகவும், தமிழ்மொழிபால் மிகுந்த பற்றும் ஆர்வமும், தெளிந்த அறிவும் கொண்ட அறிஞராகவும் திகழ்ந்தார்

அதங்கோட்டாசான் தலைமையில் முதல் தமிழ்ச் சங்கம் சூரிய முக்கில் நடந்ததாகக் கருதப்படுகிறது இவரின் தனிப் பெருமையை நாட்டிற்கும், இளம் தலைமுறையினருக்கும் உணர்த்துகின்ற வகையில், தமிழ்நாடு அரசின் சார்பில் முதல் விழா 22.6.90 அன்று, ஆசான் பிறந்து வளர்ந்த இடமான கன்னியாகுமரி மாவட்டம் முஞ்சிறை ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த அதங்கோட்டில் சிறப்பாக நடைபெற்றது. தொடக்கத்தில் கவியரங்கமும், பட்டிமன்றமும் நடைபெற்றன. தொடர்ந்து கிராமிய வீர விளையாட்டுகளும் நடந்தன.

இதனைத் தொடர்ந்து சிறப்புக் கூட்டம் தொடங்கியது. சிறப்புக் கூட்டம் தொடங்குவதற்கு முன்னர் இவ்விழாவில் கலந்து கொண்டு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்க வருகை தந்திருந்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் பேரவைச் செயலர் திரு. எல். கணேசன் அவர்கள் அதங்கோட்டில் உள்ள அதங்கோட்டாசான் சிலைக்கு மாலை அணிவித்தார்.

இவ்விழாவிற்கு, கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. எம்.கோபாலகிருஷ்ணன், இ.ஆ.ப., அவர்கள் தலைமை வகித்தார். மாவட்ட செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் திரு. த. இளங்கோவன் அனைவரையும் வரவேற்றார். சுந்தரதாஸ், எம்.எல்.ஏ., முன்னாள் எம்.எல்.சி. சங்கரலிங்கம், முன்னாள் எம்.எல்.ஏ. எஸ். ரெத்தினராஜ், முஞ்சிறை ஊராட்சி ஒன்றியத் தலைவர் சி. சிவப்பிரகாசம், மெதுகும்மல் பேரூராட்சித் தலைவர் புலவர் கோவிந்தநாதன், பேராசிரியர் இரா. தியாகசுவாமி ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

இவ்விழாவில் மாண்புமிகு முதல்வர் அவர்களின் பேரவைச் செயலர் திரு. எல். கணேசன் அவர்கள் தமிழ்ப்பெரும்புலவர் அதங்கோட்டாசானின் திருவுருவப் படத்தினைத் திறந்து வைத்தார். இவ்விழாவில் உரையாற்றிய முதல்வரின் பேரவைச் செயலர், ''இங்கு கோரிக்கைகள் பலவற்றை என்னிடம் கொடுத்துள்ளீர்கள். இவற்றில் அதங்கோட்டாசான் ஆய்வு நிலையம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை மீது உடனடி நடவடிக்கை எடுக்கப் படும்' என்று கூறினார்.

பின்னர் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவுதிருமண உதவித் திட்டத்தின்கீழ் 88 பெண்களுக்குத் தலா ரூ. 5,000 வீதம் மொத்தம் ரூ.4 இலட்சத்து 40 ஆயிரம் வழங்கினார் முடிவில், ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் திரு. என். கணபதி நன்றி கூறினார்.

– த. இளங்கோவன்,
செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர்,
கன்னியாகுமரி மாவட்டம்.



ராஜஸ்தான் மாநில

# கைவினைப் பொருள் கண்காட்சி



கண்ணைக் கவரும் வண்ண ஆடைகள், குவித்து வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றையெல்லாம் பார்க்கிறோம். எல்லாவற்றையும் வாங்கவேண்டும் போல் தோன்றுகிறது!

ஆம், அவ்வளவு நேர்த்தியாகத் தயாரிக்கப்பட்டிருக்கின்றன அவை.

சென்னை அண்ணாசாலையில் உள்ள 'பூம்புகார்' விற்பனைக் கூடத்தில், ராஜஸ்தான் மாநிலக் கைவினைப் பொருள்கள் கண்காட்சி நடந்தது.

ஜூன் 30லிருந்து ஜூலை 18 முடிய நடந்த இந்தக் கண்காட்சி கண்ணுக்கு விருந்தாய் அமைந்திருந்தது.

வண்ண ஆடைகள் மட்டுமின்றி, வகை வகையான அணிகலன்களும் இதில் இடம் பெற்றிருந்தன.

மணிமாலைகள், கற்கள் பதித்த நகைகள், பூவேலைப் பாடுகள் கொண்ட அழகிய வளையல்கள் மகளிரை மட்டுமின்றி, ஆடவரையும் கவர்ந்தன.

இதேபோல, தோல் பொருட்கள் காலணி முதல் கைப்பை வரை... எல்லாமே தரமானவை.

மணிமாலைகள், தோல் பொருட்களை அம்மாநிலக் கைவினைஞர்கள் நேரில் செய்து காட்டிய விதம் அற்புதமாக இருந்தது.

வண்ணந்தீட்டப்பட்ட மர மேசைகள், ஈசிசேர்கள், பளபளக்கும் கலையழகுடைய உலோகப் பாத்திரங்கள் முதலானவை ராஜஸ்தான் கைவினைஞர்களின் திறமையை வெளிப்படுத்துவதாக இருந்தன.

ராஜஸ்தான் சிறுதொழில் கழகப் பொறுப்பு அலுவலர் திரு. ஆனந்த விஜயவர்னியா அவர்களைச் சந்தித்தபோது,

''ராஜஸ்தான் மாநிலத்தில் கிராமப்பகுதிகளில் 15,000 கைவினைஞர்கள் இருக்கிறார்கள். இவர்கள் தயாரிக்கும் பொருள்களுக்கு நம் நாட்டில் மட்டுமின்றி, உலக நாடுகளிலும் பெருமளவில் ஆரதவு இருந்து வருகிறது. இந்தப் பொருள்கள், அமெரிக்கா, பிரான்ஸ், ஜெர்மனி, கனடா முதலான நாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றன. இக்கழகம், சென்னையில் விற்பனை நிலையம் ஒன்றை வெகு விரைவில் ஏற்படுத்தவிருக்கின்றது'' என்றார்.

ராஜஸ்தான் மாநிலக் கைவினைப் பொருள் கண்காட்சி தமிழ்நாட்டில் நடைபெறுவது நான்காவது தடவையாகும்.

கடந்த ஆண்டு நடந்த கண்காட்சியில் ரூ 4 இலட்சத்திற்கு விற்பனை ஆகியது. இந்த ஆண்டு ரூ 6 இலட்சத்திற்கு விற்பனையாகுமென எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தக் கண்காட்சியில், நடுத்தர மக்களும் வாங்கக்கூடிய விலையில் பொருட்கள் விற்கப்பட்டன. குறைந்த விலை ரூ5லிருந்து அதிகவிலை ரூ2,500 வரை பொருள்கள் இருந்தன.

பொதுவாக, இந்தக் கண்காட்சி, ராஜஸ்தான் கிராமப்புறக் கைவினைஞர்களின் கைவண்ணத்தைக் காட்டுவதாக இருந்தது.

-பி.வி.ஜி.



தமிழ் வளர்த்த பெரியார்

# தனித்தமிழ் இயக்கத் தந்தை மறைமலையடிகள்

—இரா. முத்துக்குமாரசாமி

'திராவிட மொழிக்குடும்பத்தில் தமிழ்மொழிதான் வடசொற் கலப்பு மிகக் குறைந்த அளவில் உடையது. தேவையாயின் அக்குறைந்த அளவு சொற்களைக் கூடக் களைந்துவிட்டுத் தமிழால் தனித்தியங்க முடியும்' என்று முதன்முதல் குறிப்பிட்டவர் கால்டுவெல் பெருமகனார். என்ன கருதி அதனை அவர் எழுதினாரோ தெரியாது. வடசொற் கலப்பைக் களைய வேண்டுமென்று அவருக்கு முன்னர் யாரும் துணிந்து கூற முன் வரவில்லை.

தனித்தமிழின் பெருமையை நிலை நாட்டி வடசொற்கலப்பின்றி எழுத வும் பேசவும் முடியுமென்று தம் வாழ்நாள் முழுவதும் கடைப்பிடித் துக் காட்டியவர் 'பொழுதெல்லாம் தமிழுக்குழைத்த புலவன்' என்று பாவேந்தர் பாரதிதாசனால் போற்றப் பெற்ற மறைத்திரு மறைமலை அடிகளார் ஆவர்.

'அற்றை நக்கீரனாரும் பிற்றைச் சிவஞான முனிவரனாரும் ஒருருக் கொண்டு' போந்தவர் சுவாமி வேதாசலம் என்ற மறைத்திரு மறை மலையடிகளார்' என்று போற்றுவார் திரு.வி.க.

*1876 ஜூலைத்திங்கள் 15-ஆம்* நாள் நாகையில் தோன்றியவர் அடிகளார். பெற்றோர் சொக்கநாதர் - சின்னம்மை. இளமையிலேயே தமிழ் மேல் கொண்ட பற்றால் தமிழ்நூல் களை நெட்டுருச்செய்தார். தொல் காப்பியத்தையும் சங்க நூல்களையும் முறையாகப் பயின்றார். நாகை பண்டித நாராயணசாமி பிள்ளையிடம் இவற்றை முறையாகக் கற்றார்.

இவர்தம் தமிழ்ப்புலமை இவரைச் சென்னைக் கிறித்துவக் கல்லூரித் தமிழாசிரியராக்கியது. ஆங்கிலத் திலும் வடமொழியிலும் நன்கு புலமை பெற்றார். ஆங்கில நாடகப் பேராசிரியர் பெர்னாட்ஷாவைப் போல் அடிகளார் தாம் இயற்றிய நூல்கள் அனைத்துக்கும் விரிவான முன்னுரை எழுதினார். அவர்தம் முன்னுரைகள் அனைத்தும் ஆங்கிலத் தில் அமைந்துள்ளது அவருக்கிருந்த ஆங்கிலப்புலமையை எடுத்துக் காட் டியது.

அடிகளாரின் வடமொழிப்புலமை காளிதாசரின் 'சாகுந்தல' நாட கத்தைத் தமிழாக்கியதில் காணலாம். மும்மொழிப்புலமை பெற்றிருந்த அடிகளார் சைவத்தையும் தமிழையும் தம்மிருகண்ணெனப் போற்றினார். சைவசித்தாந்த சண்டமாருதம் எனப் போற்றப் பெற்ற சோமசுந்தர நாயகர் அவர்களிடம் அடிகளார் சமய அறிவு பெற்றார். பதின் மூன்றாண்டுகள் கல்லூரிப் பணி யாற்றி ஓய்வுபெற்றுச் சென்னையை அடுத்த பல்லாவரத்தில் நிலையாக *1911-இல்* குடியேறினார். *1950-ஆம்* ஆண்டு செப்டம்பர் 15-ஆம் நாளில் மறையும்வரை அங்கே தாம் அமைத்த மாளிகையிலேயே வாழ்ந்து வந்தார்.

அடிகளார் வாழ்வின் பயனே தனித்தமிழ் இயக்கம்தான். தமிழ் மொழியில் பிறமொழிச் சொற்கலப் பால் நல்ல, தூய தமிழ்ச் சொற்கள் வழக்கற்றுப் போய் விடுகின்றனவே என்ற கவலையாலும் வருத்தத்தினா லுமே இவ்வியக்கம் தோன்றியதே தவிர பிறமொழிமேல் ஏற்பட்ட வெறுப்பினாலல்ல. அயன்மொழிக் கலப்பால் தமிழ் தன்னியல்பு கெட்டு மலையாளம், தெலுங்கு போல் முற்றிலும் திரிந்து வேறு மொழியாகிவிடுமோ என்ற அச்ச மும் தனித்தமிழ் இயக்கம் தோன்றக் காரணமாயிற்று.

அடிகளாரின் இயக்கம் பலவேறு எதிர்ப்புகளிடையே வளர்ந்தது. சுவாமி வேதாசலம் என்ற தம் பெயரை மறைமலையடிகள் என்று மாற்றிக்கொண்டார். தாம்கொண்ட கொள்கையை விடாது; எழுத்திலும் பேச்சிலும் தனித்தமிழ்ச் சொற் களையே பயன்படுத்தினார். தாம் முன்னரே எழுதிய நூல்களில் பயின்று வந்த வடசொற்களை முற்றுங் களைந்து புத்தாக்கம் செய்தார்.



மறைமலை அடிகளாரின் ஆசிரியத் தோற்றம்

**‘மறைமலை யடிகள் பிறந்திலரேல்**
**மணிமிடை பவளம் வளர்ந்திருக்கும்**
**அறிவிலர் கூட வடமொழியில்**
**ஐந்துசொல் தெரிந்த அவ்வளவில்**
**விறுவிறுஎன்று மந்திரங்கள்**
**மேடையில் ஏறி வெளுத்திருப்பார்**
**குறுகிய பார்வை தொடர்ந்திருக்கும்**
**குலநலம் யாவும் உடைந்திருக்கும்’**

என்று இலங்கைக்கவிஞர் முருகையன் பாடியது போல், அடிகளார் தோன்றியிராவிடில், தமிழ், இருபதாம் நூற்றாண்டின் இறுதியில், ஆங்கிலம், வடசொல் முதலிய அனைத்து மொழிச் சொற்களும் கலந்த ‘ஓர் அவியல்’ மொழியாக மாறியிருக்கும்.

அடிகளார் தம் இயக்கத்தை வலுப்படுத்தத் தனித்தமிழில் எல்லாத் துறை நூல்களையும் எழுதினார். தமிழ்மொழியின் இடத்தைப் பிறமொழி கவர்ந்துவிடக் கூடாது என்பதற்காக மொழிக்காப்புப்போர் நடந்த போது அதில் ஈடுபட்டார். இந்தி கட்டாயப் பாடமாக ஆக்கப்பெற்றதை எதிர்த்துத் தமிழ்மக்கள் கிளர்ந்தெழுந்த போது அடிகளார் தலைமை தாங்கி நடத்தினார். அதில் வெற்றியும் கண்டார்.

மாணவப் பருவத்திலேயே அடிகளார் சமயக் கூட்டங்களுக்குச் செல்லும் இதழ்களில் கட்டுரைகள் எழுதுவதுமாக இருந்தார். முதன் முதலாக இலக்கியம், சமயம் போன்ற துறைகளில் சிறுசிறு நூல்கள் எழுதத் தொடங்கினார். 1898-இல் நாகையிலிருந்தபோதே முதற்குறள்வாத நிராகரணம், சித்தாந்த ஞானபோதம் சிற்றம்பலநாடி, ஞானசேகரவெண்பா, துகளறுபோத உரை, பஞ்சாக்கர மாலை, வேதாந்தவிசாரம் போன்ற நூல்களை வெளியிட்டார்.

இளமையில் கடும் வயிற்றுவலி வந்த போது திருவொற்றியூரிலுள்ள முருகனை வழிபட்டு நோய்நீங்கப் பெற்றார். அவ்வமயம் முருகன் மீது ‘திருவொற்றி முருகன் மும்மணிக் கோவை’யைப் பாடினார். சங்கப் பாடல்களுக்கு நிகராக அக்கோவையின் பாடல்கள் இருந்ததெனத் தமிழறிஞர்கள் போற்றினர்.

பிறஇதழ்களில் கட்டுரை எழுதி வந்த நிலையில் தாமே ஓர் இதழ் தொடங்கினாலென்ன என்ற எண்ணம் அடிகளாருக்குத் தோன்றியது. 1902-இல் ‘ஞானசாகரம்’ என்ற மாத இதழைத் தொடங்கிப் பல்லாண்டுகள் நடத்தினார். அவ்விதழில் அவர் பல புதுமைகளைப் புகுத்தினார். தாம் எழுத நினைத்த பல நூல்களைப் பகுதி பகுதியாக ஞானசாகரத்தில் எழுதினார். அவற்றைத் தனித்தனியாகப் பிரித்து அடுக்கினால் தனிநூல் கிடைக்க வழிசெய்தார். பல நூல்களை அவர் இவ்வழியில் உருவாக்கினார். தனித்தமிழ்க் கொள்கையைப் பின்பற்றத் தொடங்கியபோது ‘அறிவுக் கடல்’ என்று இதழின் பெயரைத் தனித்தமிழாக்கினார்.

தமக்கிருந்த ஆங்கிலப் புலமையைக் கொண்டு ORIENTAL MYSTIC MYNA என்ற இதழை 1908-இல் தொடங்கினார். சில ஆண்டுகளில் அது நின்றுவிட்ட நிலையில் 1935-இல் OCEAN OF WISDOM என்ற இதழைத் தொடங்கி நடத்தினார். முதல் இதழில் அடிகளாருடைய கட்டுரைகளும் பிற அறிஞர்கள் கட்டுரைகளும் வெளிவந்தன. பின் வந்த இதழ், அடிகளாரின் எழுத்துரைகள் மட்டுமே தாங்கிவந்தது.

அடிகளார் உடல்நலம் பேணுவதில் வல்லவர். சிவந்தமேனி, நெடிய தோற்றம், ஒளி தவழும் முகம், கனிந்த பார்வை, பெண்மையின் சாயல்கலந்த குரல், இவ்வாறு கண்டவரைக் கவரும் தோற்றம். அதனைக் காப்பதில் மிக்க கவனம். உண்பதிலும் உறங்குவதிலும் எல்லாவற்றிலும் ஓர் ஒழுங்கு. தாம் மட்டுமல்லாது எல்லாரும் நூறாண்டு வாழ வேண்டுமென்பதற்காக ‘மக்கள் நூறாண்டு உயிர்வாழ்வதெப்படி’ என்ற அறுநூறு பக்கங்கட்கு மேற்பட்ட விரிவான நூலை எழுதினார். உடல்நலம் பேண, உண்ணும் உணவில் கருத்தாக இருக்கவேண்டும். அதற்கு வழி காட்டியாக ‘பொருந்தும் உணவும் பொருந்தா உணவும்’ என்ற அரிய நூலை ஆக்கினார்.

துறவு நிலை மேற்கொண்ட அடிகளார்க்கு மறைபொருள் (MYSTICISM) துறையில் நாட்டம் உண்டாயிற்று. பிறரை வயப்படுத்தும் வசியக் கலையை விளக்க ‘மனிதவசியம்’ என்ற சீரிய நூலைப் படைத்தார். அக்கலையைத்தாமே பயின்று அதனை மக்களுக்கு நோய்நீக்கப் பயன்படுத்தினார். பிறர்நோயைக் குணப்படுத்த வசியக்கலை பயன்படும் என்று செய்துகாட்டினார். தமிழ் மொழிக்கு ஆக்கம்தரும் நூல்களைப் படைக்க வேண்டுமென்ற எண்ணம் வலிமைபெற இக்கலையைக் கைவிட்டார். யோகநித்திரை, தொலைவிலுணர்தல், மரணத்தின்பின் மனிதர்நிலை போன்றவை இத்துறைகளில் தமிழில் எழுந்த முதல் நூல்களாகும். இவை தமிழுக்குப் புதிய துறைகள்.

தமிழ் இலக்கியத்திற்கு அடிகளார் ஆற்றிய பணி பலவகைப்படும். நாடகம், கவிதை, புதினம், ஆய்வு போன்ற பலதுறைகளில் இவர்தம்







மறைமலை அடிகளாரின் இளமைக் காலத் தோற்றங்கள்

நூல்கள் உருவாயின. காளிதாசரின் சாகுந்தல நாடகத்தைத் தமிழாக்கம் செய்ததன் மூலம் இவர்தம் வட மொழிப் புலமை தமிழுலகிற்கு நன்கு புலனாயிற்று. நாடகத்தைத் செய்த துடன் நில்லாது நாடக ஆய்வு நூலை யும் தனியாகச் செய்து நாடகத்திற னாய்வு நூலைத் தமிழகத்திற்கு அறி முகம் செய்தார். புதிதாக அம்பிகாபதி- அமராவதி என்ற நாடகத்தையும் அவர் படைத்தார்.

சங்கப்பாடல்களுக்கு முன்பெழுந்த உரையாசிரியர்களின் உரை பல பல இடங்களில் புனைந்துரையாகவும் நூலாசிரியர் கூறாதன சிலவற்றை இல்லது விளக்கும் வகையிலும் அமைந்திருப்பது கண்டு அடிகளார் வருந்தினார். இவர் தீட்டிய முல்லைப் பாட்டாராய்ச்சி உரையும் பட்டினப் பாலை ஆராய்ச்சி உரையும் தமிழன் பர்க்கும் தமிழ் பயிலும் மாணவர்க் கும் பெருவிருந்தாய் அமைந்தன.

இவர்தம் திருக்குறள் ஆராய்ச்சி, குறள் பற்றிய புதிய செய்திகளை மக்களுக்குத் தந்தது. வள்ளுவரின் கால ஆய்வில் ஈடுபட்டு வள்ளுவர் பிறந்த ஆண்டு இதுவென நிலை நாட்டிய பெருமை அடிகளாருக்கு உண்டு. அக்கால முறையே இன்று தமிழக அரசாலும் மக்களாலும் பின் பற்றப்பெறுகிறது.

தமிழ் இலக்கிய வரலாறு, ஈரா யிரம் ஆண்டுகட்கு மேற்பட்ட நெடிய வரலாற்றினை உடையது. இதில் பலவேறு சிக்கல்கள் இருப்பினும் மாணிக்கவாசகரின் காலம் ஒரு புதிராகவே இருந்து வருகிறது. அவர் தேவார மூவருக்கும் முற்பட்டவரா பிற்பட்டவரா என்பது இன்னும் முடிந்தபாடில்லை. அடிகளார், மூவ ருக்கும் முற்பட்டவர் என்ற கருத்தை நிலைநாட்ட ஆயிரம் பக்கங்களுக்கு மேல் பல்வேறு சான்றுகள் காட்டி நிறுவியுள்ளார்.

தமிழில் கடிதவடிவில் புதினம் எழுதும் புதியமுறையைப் புகுத்தியவர் மறைமலையடிகளார். கோகிலாம்பாள் என்ற கதைத்தலைவி எழுதிய கடி தங்கள் ஒரு புதினம்போல் கோவை யாக அமைந்துவிட்டது. சாதிவேறு பாடுகளற்ற ஒரு சமுதாயத்தைக் காண விழைந்தார் அடிகளார். இன்றுள்ள சமுதாயச் சூழலில் கைம் பெண்டிர்படும் துன்பத்தைக்கண்டு அதனைப்போக்கவே இப்புதினத்தைப் படைத்தார். குமுதவல்லி அல்லது நாகநாட்டரசி என்பது ஆங்கில நாவல் ஒன்றின் தழுவலாகும். அதுவும் முற்றுப்பெறாதது. இருப் பினும் அடிகளாரின் நடைக்காக அதனை விரும்பிப் படிப்பவர் பலர் உண்டு.

அடிகளாருக்குக் கட்டுரை எழு துவது கைவந்தகலை. படிப்பவர்க்கு ஏற்ற வகையில் வேறுவேறு நடை யில் கட்டுரை எழுதவல்லவர். சிறு சிறு தொடர்களைக்கொண்டு எழுதப் பெற்ற 'சிறுவர்க்கான செந்தமிழ்' 'இளைஞர்க்கான இன்றமிழ்' போன் றவை இளஞ்சிறார்க்குத் தனித்தமிழ் நடையை அறிமுகப்படுத்துபவையாம். அவர்தம் 'சிந்தனைக் கட்டுரைகள்,' 'அறிவுரைக் கொத்து' போன்றவை மக்களுக்குச் சிந்தனையைத் தூண் டும் செறிவான கட்டுரைகளைத் தாங்கியவை. அடிகளாரின் ஆழ்ந்த புலமை நடையை இவற்றில் காணலாம்.

சைவத்தைப் பரப்புவதில் அடி களார் மிகவும் முனைப்புடன் நின் றார். 'சைவசித்தாந்தப்பெருமன்றம்' என இன்று வழங்கும் சைவசித்தாந்த சமாஜம்' அடிகளாரால் தோற்றுவிக் கப்பெற்றதேயாம். இதில் அடிகளா ருக்குத் துணைநின்றவர் திருப்பாதிரிப் புலியூர் ஞானியார் அடிகள் ஆவர். 'சமாஜத்தின்' சார்பில் அவ்வப் போது அடிகளார் ஆற்றிய சமயப் பேருரைகள் 'முன்பனிக்கால உபந் நியாசங்கள்', பின்பனிக்கால உபந் நியாசங்கள் என்ற தலைப்பில்நூலாக உருப்பெற்றன.

சமய நம்பிக்கையை வளர்க்கும் போது பழைய பழக்கங்களை அப் படியே கண் மூடிக்கொண்டு கடைப் பிடிக்கக்கூடாது என்பது அவர்தம் எண்ணம். சிறுதெய்வங்களை வழி படுவதையும் சிற்றுயிர்களைப் பலி யிடுவதையும் அவர் கண்டித்தார். சிவனே முழுமுதற்கடவுள் என்பதும் அவனைமட்டுமே வழிபட வேண்டும் என்பதும் அவர்தம் துணிவு. திருக் கோயில் வழிபாடு, சைவசமயப் பாதுகாப்பு, சீர்திருத்தக் குறிப்புகள் போன்ற சிறுநூல்களில் இத்தகைய

கருத்துக்களை அடிகளார் பொதிந்துள்ளார்.

கற்போர் நெஞ்சை உருகவைக்கும் திருவாசகத்திற்கு அடிகளார் விரிவான உரை எழுத முற்பட்டு, முதல் நான்கு அகவல்களுக்கு மட்டும் எழுதி முடித்தார். பல்வேறு சூழல்களினால் உரை முற்றுப்பெறாமலேயே போயிற்று.

சைவசித்தாந்தமே மக்கள் பின்பற்ற வேண்டிய சரியான சமயத்துவம் என்பதை நிலைநாட்ட சைவ சித்தாந்த ஞானபோதம், சிவஞான போத ஆராய்ச்சி, SAIVA SIDDHANTHA AS A PHILOSOPHY OF PRACTICAL KNOWLEDGE போன்ற அரியநூல்களை அடிகளார் படைத்தார்.

தமிழர் வரலாற்றை ஆய்வதிலும் அடிகளார் ஈடுபட்டார். தமிழர் மதம், பண்டைக்காலத் தமிழரும் ஆரியரும், வேளாளர் நாகரிகம் போன்றவை தமிழ் மக்களின் சமுதாய வரலாற்றைத் தெளிவாக எடுத்துரைக்கும் நூல்களாகும்.

தம் எழுத்தாலும் பேச்சாலும் தமிழ் மக்களின் உள்ளத்தைக் கவர்ந்து உணர்ச்சிகளைத் தட்டியெழுப்பிய அடிகளார் தாம் பேசியதையும், எழுதியதையும்விட அதிகமாகப்



மறைமலை அடிகளாரின் துறவுக்கோலம்

படித்தார். நாட்கடமையில் படிப்பதற்கென்று ஒரு நேரத்தை ஒதுக்கி வைத்தார். தமக்கு வேண்டிய நூல்களை விலைகொடுத்து வாங்கிச் சேர்த்தார். இவை தனி நூலகமாக அவர்தம் இல்லத்தின் மேற்பகுதியில் திகழ்ந்தன. நூல்களைத் தம் உயிர் போல் பாதுகாத்தார். நூலில் தமக்குப் பிடித்த பகுதிகளை அடிக்கோடிட்டும், பக்கக்கோடிட்டும் படித்தார். நூல்கள் அனைத்திற்கும் மேலுறையிட்டுப் பாதுகாத்தார். தம் மறைவுக்குப்பின் அந்நூல்கள் தமிழ் மக்களுக்குப் பயன்படத் தனியாகத் தம்பெயரில் ஒரு நூலகமாக அமையவேண்டுமென்று தம் விருப்ப ஆவணத்திலேயே குறிப்பிட்டார். அவர்தம் விருப்பத்தின் படி அவை இன்று சென்னை மறைமலையடிகள் நூல் நிலையத்தில் இடம்பெற்று இன்றைய ஆய்வாளர்கட்குப் பெருந்துணைபுரிந்து வருகின்றன.

இருபதாம் நூற்றாண்டுத் தமிழிலக்கிய வரலாற்றில் தமக்கெனத் தனி இடம் பெற்றுக்கொண்ட மறைத்திரு. மறைமலையடிகளார் நினைவு, பல்வகையாலும் போற்றப் பெறுகிறது. மறைமலையடிகள் நூல் நிலையம், மறைமலையடிகள் கலை மன்றம், மறைமலையடிகள் பாலம், மறைமலையடிகள் நகர்கள், சென்னையை அடுத்துப் பரந்து விரிந்த மறைமலைநகர், அப்பெயரிலேயே ஒரு தொடர்வண்டி நிலையம் இப்படிப் பற்பல வழிகளில் அடிகளார் நினைவு போற்றப்பெறுகின்றது. அடிகளாரின் எழுத்துக்கள் தமிழர்கள் நெஞ்சில் நீங்கா இடம்பெற்றுத் தமிழ் உணர்வை ஊட்டிக்கொண்டே இருக்கும் என்பது உறுதி.

# கலைக் களஞ்சியத்தின் கதை!

கலைக்களஞ்சியத்தை ஆங்கிலத்தில் 'என்சைக்ளோப்பீடியா' என்பர். மக்கள் கற்று அறிய வேண்டிய இன்றியமையாத பொருள்களனைத்தும் அடங்கியது என்பது இதன் பொருள்.

'கலைக் களஞ்சியம்' என்னும் நூல் செய்ய வேண்டும் என்று உலகில் முதன் முதலில் எண்ணியவர்கள் சீன மக்களே ஆவர். ஆனால், அவர்கள் செய்த நூலில் இக்காலத்துக் கலைக் களஞ்சியத்தில் அறிஞர்கள் கலைக் களஞ்சியத்திற்காகவே எழுதும் கட்டுரைகள் காணப்படுவது போல் காணப்படவில்லை. அவர்கள் நூல் அதுவரை இயற்றப்பட்டுள்ள நூல்களிலிருந்து அரிய பொருள்களைத் திரட்டித் தொகுத்ததேயாகும்.

இத்தகைய சீன நூல் முதன் முதல் 10-ஆம் நூற்றாண்டில் தோன்றியது. அதன்பின் 14, 15-ஆம் நூற்றாண்டுகளிலும் எழுதப் பெற்றன. ஆனால், 18-ஆம் நூற்றாண்டில் செய்யப்பெற்ற கலைக்களஞ்சியமே பெரியது. 5020 தொகுதிகள் கொண்டது. அதன் படி (பிரதி) ஒன்று 700 தொகுதிகளாகக் கட்டப்பெற்று இலண்டனிலுள்ள பிரிட்டிஷ் பொருட்காட்சிச் சாலையில் வைக்கப்பட்டிருக்கிறது.

பொருள்கள் அனைத்தையும் கொண்ட நூல் ஒன்றை உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தை மேனாட்டில் முதன் முதலாகக் கூறியவர் அறிஞர் அரிஸ்டாட்டில் ஆவர். அவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் கிரேக்க நாட்டிலிருந்து மேனாட்டு அறிவியற் கலைக்கு அடிகோலியவர் என்று கருதப்படுபவர்.

அவருடைய கருத்தை ஏற்றுப் பல அறிஞர்கள் அத்தகைய கலைக் களஞ்சியத்தை இயற்றப் பல நாடுகளிலும் முயன்று வந்தார்கள். எனினும் 1541-ஆம் ஆண்டில், ஜெர்மனியில் வாழ்ந்த ரிங்கர்ஜிபர்யஸ் என்பவரே 'என்சைக்கிளோப்பீடியா' என்னும் சொல்லை முதன் முதலாகக் கையாண்டவர். ஆனால், இப்பொழுதுள்ள கலைக் களஞ்சியங்களில் பொருள்களை நிரல் பெற அமைத்திருப்பது போல முதன்முதலாக நிரல்படுத்தித் தந்தவர் 'ஆல்ஸ்டெட்' (1588-1688) என்ற ஜெர்மானியரே ஆவர்.

இந்நாளில் உலகத்திலுள்ள கலைக்களஞ்சியங்களில் அதிகப் புகழ் பெற்றது ஆங்கில மொழியில் 'என்சைக் கிளோப்பீடியா பிரிட்டானிக்கா' என்னும் பெயரால் வழங்குவதே ஆகும். இது 1768-இல் தொடங்கப் பெற்றது.

இங்கிலாந்தில் வெளியாகியுள்ள 'எவ்வரிமான்ஸ்' (Everyman's) கலைக் களஞ்சியமும், 'சேம்பர்ஸ் கலைக் களஞ்சியமும் சிறந்தனவாகும்.

தமிழில் கலை, விஞ்ஞானம் முதலான எல்லாத் துறைகளையும் கொண்ட விரிவான கலைக்களஞ்சியம் ஒன்றை உருவாக்கத் தமிழ் வளர்ச்சிக் கழகம் முயன்று வெற்றி கண்டுள்ளது.

**ஆதாரம்**
**டாக்டர் இராம. சுப்பிரமணியன் எழுதிய 'நூலகம்' என்னும் நூலிலிருந்து**

பாவேந்தர் நூற்றாண்டு:

# புரட்சிக் கவிஞரின் மூன்று கட்டளைகள்

மு. திருமேனி



இந்த நூற்றாண்டின் தொடக்கத்தில் இரண்டு குரல்கள் தமிழ் இலக்கிய உலகில் ஒலித்தன. ஒன்று தேசியக் குரலான, வெள்ளையரின் ஆதிக்கத்தை எதிர்த்த உரிமைக்குரலான பாரதியின் குரல். பிறிதொன்று திராவிடக்குரலான, பழமைகளை எதிர்த்த புரட்சிக் குரலான பாரதிதாசனின் குரல்.

பாவேந்தர் பாரதிதாசனின் நூற்றாண்டு விழாக் காணும் நாம் இந்த ஆண்டின் ஒரு நாளாவது அவர் நமக்கிட்ட ஆணைகளை எண்ணிப் பார்த்தல், செயற்படுத்த முனைதல் நன்றன்றோ?

கிறித்தவர்கள் பத்துக் கட்டளைகளைப் பற்றிப் பேசுவார்கள். அவற்றை இறைவன், மோசஸ் வழியாக எடுத்துச் சொன்னதாகக் கொண்டாடுவார்கள். அதுபோன்றே பாரதிதாசனும் தமிழர்க்கு மூன்று கட்டளைகள் இட்டார். இவற்றைத் திறனாய்வாளர்கள் உற்று நோக்கி அவரது நூல்களில் கணிக்கின்றனர். பாரதிதாசனின் இந்த மூன்று கட்டளைகளை முறையே அரசியல், மொழி, சமுதாயம் ஆகிய முத்துறைகளிலும் நாம் கற்றுக் கொள்ள வேண்டும். இந்த மூன்று கட்டளைகளால்தான் நாம் அவர்க்குப் புரட்சிக் கவி என்றும், மரபுக் கவி என்றும், புதுமைக் கவி என்றும் புகழாரம் சூட்டி மகிழ்கின்றோம்.

அரசியலில் தமிழர்க்கு அவர் ஒன்று சொன்னார், தமிழ் மண்ணை ஆளமுனைவோர் தமிழ்ப் பண்பின் அடித்தளம் கொண்டவராக இருக்க வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

''தமிழாய்ந்த தமிழன்தான்
தமிழ்நாட்டின்
முதலமைச்சாய் வருதல்
வேண்டும்
தமிழ்ப் பகைவன் முதலமைச்சாய்த்
தமிழ்நாட்டில்
வராது தடுத்தல் வேண்டும்''

என்றே அவர் தமிழர்க்கு அறிவுரை ஈந்தார். அவர் கண்ட கனவு இன்று நனவாகி விட்டதன்றோ? இன்று தமிழக முதல்வராக இருக்கும் நம் கலைஞரவர்கள் தமிழ்மொழி ஆய்ந்து அறிந்து காத்த காவலர் என்பது நாம் அறிந்த ஒன்றுதானே! அவர் எழுதிய 'குறளோவியமும்' 'சங்கத்தமிழும்' அவர் தமிழாய்ந்த தமிழன்தான் என்பதை நமக்குச் சுட்டிக் காட்டுகின்றன. அரசியலில் அவர் இட்ட கட்டளை தமிழரால் செயற்படுத்தப் பட்டது.

தமிழியக்கம் கண்டவர் பாரதிதாசன், இந்தி எதிர்ப்போடு நின்றவர் அல்லர் அவர். தமிழர் தம் தாய்மொழியைப் புறக்கணித்ததைப் பேணாததை அவர் உணராமல் இல்லை. தமிழ் உயர்தனிச் செம்மொழி, இதைப் பாவாணரும் அப்பாத்துரையும் பல்லாண்டுகளாகப் பாடாற்றி நூல்கள் வெளியிட்டு நிறுவினார்கள். தமிழ், உலகப் பழமொழிகளான கிரேக்கம், இலத்தீனம், எபிரேயம், வடமொழி ஆகியவற்றுடன் ஒப்பு நோக்கத்தக்கது. மூவாயிரம் ஆண்டுகட்கு முன்னர்த் தோன்றிய - வழங்கிய இம்மொழிகள் எல்லாம் வழக்கிழந்து, வடிவிழந்து போயின. ஆனால் தமிழ் ஒன்றுதான் மக்கள் மொழியாக இன்றும் நின்று நிலவுகிறது. எனினும் தமிழ் வாழ, வளம் பெற தமிழர் அதை நயமுடன் பேசப் பாரதிதாசன் விரும்பினார்.

ஆனால் இன்று தமிழகத்தின் தலைநகரிலே கூடத் தமிழ் ஒழுங்காகப் பேசப்படுவதில்லை. தமிழ் நாளேடுகள், கிழமை ஏடுகள், திங்கள் ஏடுகள் தமிழைத் திட்டமிட்டுச் சாகடிக்கின்றன. மொழியறியா மூங்கையர் பலர் இன்று தமிழ் எழுத்துலகில் கால்வைத்துத் தமிழைச் சாகடிப்பதை அவர் உணராமல் இல்லை. தமிழகக் கடைகளில், சதுக்கங்களில், விற்பனைக் கூடங்களில் தமிழ்ப் பெயர்ப் பலகைகள் இல்லையே என்று அவர் வெந்து போனார்; உள்ளம் நொந்து போனார்.

இந்த வேதனையே தமிழியக்கமாக இன்று வடிவெடுக்கிறது. நம் சட்டமன்றத் தலைவர் தமிழ்க் குடிமகனார் இத்துறையில் காட்டும் ஆர்வம் பாராட்டத் தக்கது. ஆனால் இந்தத் தமிழியக்கத்திற்கு எதிர்ப்புகள் ஏராளம், ஏராளம். ஆங்கில நாளேடுகள் இந்த முயற்சியினை எதிர்த்து எழுதி வருகின்றன. தமிழ்நாட்டில் தமிழில் பெயர்ப்பலகைகள் வேண்டுமென வலியுறுத்துவது தவறாகாது.

இந்த மொழி இறவாத மொழியன்றோ? தொடர்ந்து பல்லாயிரம் ஆண்டுகள் அது வாழ வேண்டுமானால் தமிழர் அதை நாவிலே அல்லவா நடமாட விட வேண்டும்! அந்த இறவாத மொழிக்குத் தீக்குளித்து இறந்தவர்தாம் எத்தனை பேர்! உலகிலே மொழிக்காக உயிர் நீத்தவன் தமிழன்தான். 'உடல் மண்ணுக்கு', 'உயிர் தமிழுக்கு' என முழக்கமிட்ட இளைஞர் தமிழ் இளைஞர் அன்றோ? சில இலட்சியங்களுக்காக தென் வியட்நாமில் புத்தமதத் துறவியர் தீக்குளித்தனர். பற்றற்ற அவர்கள் தீக்குளித்தது வியப்பில்லை; கடினமுமில்லை. ஆனால் அன்றாட வாழ்வில் ஈடுபாடுடைய, மனைவி, மக்கள், சுற்றம், நண்பர் எனும் உணர்வுகளுக்கு ஆளாகிய தமிழர் எண்மர் தீக்குளித்த கதை வரலாற்று ஏடுகளின் எந்தப் பக்கத்திலும் காணக்கிடைக்காதவை. அந்த இளைஞர்க்கு ஊக்கம் தந்தது பாரதிதாசனின் தமிழியக்க முழக்கமன்றோ?

தமிழைத் தமிழர் ஒழுங்காகப் பேசாதவரை, தமிழில் பெயர்ப் பலகைகள் தமிழ் நாட்டில் காணப் படாதவரை அவரின் இரண்டாவது கட்டளை புறக்கணிக்கப்பட்டதாகவே கருதப்படும்.

பாரதிதாசனின் மூன்றாவது கட்டளை இந்தியா எங்கணும் நல்ல வரவேற்பைப் பெற்றுவிட்டது. உலகிலேயே குடும்பக்கட்டுப் பாட்டை அரசின் கொள்கையாக முதன் முதலாக அறிவித்த நாடு இந்தியா தான். இன்று இந்தியா பின் தங்கிய நாடல்ல. ஆனால் அதன் விரைந்த முன்னேற்றத்தைப் பல்கிவரும் மக்கள் தொகை வீழ்த்தி விடுகிறது.

குழந்தைகள் மிகுதி; குடும்பம் அவதி;
பிள்ளைகள் பெருக்கம்;
வளமையின் சுருக்கம்

இதை நன்குணர்ந்த பாரதிதாசன் மூன்றாவது கட்டளை இட்டார். தமிழ் இலக்கியங்கள் பிள்ளைப்பேற்றைப் பெரிதும் போற்றும், எனினும் இரு கவிஞர்கள் பிள்ளைப்பேற்றைக் கண்டித்தனர். ஒருவர் பட்டினத்தார்.

நாப்பிளக்கப் பொய்யுரைத்து
நவநிதியம் தேடி
நலமொன்றும் அறியாத
நாரியரைக் கூடிப்
பூப்பிளக்க வருகின்ற புற்றீசல்
போலப்
பொலபொலெனக் கலகலெனப்
புதல்வர்களைப் பெறுவீர்
ஈசல்கள் கிளம்புவதுபோலக் குழந்தைகள் அறிவிலாப் பெற்றோர்க்குப் பெருகுவது கண்ட பட்டினத்தார் அன்றே குடும்பக்கட்டுப் பாட்டைச் சுட்டிக் காட்டினார். ஆனால் அவர் பெண்களைப் பழித்ததுபோல் பாரதிதாசன் பழிக்கவில்லை.

இன்றைய மனிதன் காதலும் பெற வேண்டும். ஆனால் குழந்தைகள் பெறக்கூடாது. இந்தச் சிந்தனை ஒட்டம் முற்போக்காளராகிய பார்திதாசனைத் தாக்கி இருக்கிறது. அவர் அன்றே,

''காதலுக்கு வழிவகுத்துக்
கருப்பாதை சாத்தக்
கதவொன்று கண்டறிவோம்;
இதிலென்ன குற்றம்?
சாதலுக்கோ பிள்ளை!
தவிப்பதற்கோ பிள்ளை!
சந்தான முறைநன்று;
தவிர்க்கும்முறை தீதோ?''

என்று பாடி வைத்தார். ஏழ்மையின் காரணமாய் பிள்ளைகள் இருப்பதைக் கண்ட பாரதிதாசன், அவை உணவின்றி, உடையின்றி நலிவுதைக் கண்ட பாரதிதாசன், அவை பெற்றரால் விற்கப்படுவதைக் கண்ட பாரதிதாசன் குடும்பக் கட்டுப்பாட்டைத் துணிந்து வலியுறுத்தினார். இந்தியா விடுதலை பெறும் முன்னரே, ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகட்கு முன்னரே அவர் இப்படி எழுதி இருப்பது குடும்பநலத்துறை சார்ந்த அரசு அலுவலர்க்கு வியப்பாகத் தோன்றலாம். ஆனால் பாரதிதாசன் இப்பாடலில் தேவாதிகளுக்கும் ஒழுக்கவாதிகளுக்கும் இடையில்சிக்கித் தவிக்காமல் பொருளியல் கண்ணோட்டத்தில் தமிழர்க்கு மூன்றாம் கட்டளையையும் இட்டிருக்கிறார் என்பது எண்ணி எண்ணி மகிழற்பாலது.

அந்த மூன்று கட்டளைகளில் முதலும் மூன்றும் தமிழரால் புரிந்து கொள்ளப்பட்டன; ஓரளவு நிறைவேற்றப்பட்டன. ஆனால் இரண்டாம் கட்டளைதான் இடுப்பொடிந்து கிடக்கிறது. அந்த இரண்டாம் கட்டளை நிறைவேற்றப்பட்டாக வேண்டும். அப்போதுதான் பாவேந்தரின் நூற்றாண்டு விழாவுக்குப் பொலிவு இருக்கும்;

With Best Compliments From

N.K. RAMASWAMY

LAKSHMI TALKIES
NAGERCOIL

THE BEST ENTERTAINING HOUSE IN THE HEART OF THE TOWN

மாணவர் பக்கம்

# கவனம்! கவனம்!

—பி.வி. கிரி







பள்ளிக்குச் சென்றால்
படிப்பினில் கவனம்!

வேலைக்குச் சென்றால்
வினையினில் கவனம்!

விளையாடச் சென்றால்
வீரத்தில் கவனம்!

கடைக்குச் சென்றால்
கருத்தினில் கவனம்!

பயணம் செய்தால்
பாதையில் கவனம்!

நீந்திடச் சென்றால்
நீச்சலில் கவனம்!

கவனம்! கவனம்!
எதிலும் கவனம்!

கவனம் இருந்தால்
புவனம் நமதே!







## இந்தியாவில் தயாராகும் புதிய மருந்து

மாற்றுச் சிறுநீரகம் பொருத்தப்படுபவர்களுக்குத் தேவைப்படும் காப்பு மருந்து ஒன்று, இந்தியாவில் முதன்முதலாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. இதனைத் தயாரித்திருப்பவர் பம்பாயைச் சேர்ந்த டாக்டர் திருமதி சாரதா ஜே. செனாய் ஆவார்.

ஒரு மாத்திரையின் விலை ரூ.8 முதல் 10 வரை ஆகிறது. ஒரு நாளுக்கு 3 மாத்திரைகள் சாப்பிட வேண்டும். இத்தகைய மாத்திரைகள் இதுவரை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு வந்தன. இப்போது, இந்தியாவிலேயே தயாரிக்கப்படுவது பெருமைக்குரிய செய்தி.

ஒரு நாட்டின் வாழ்வும் தாழ்வும் அந்த நாட்டு இளைஞர்கள் பெறும் கல்வியைப் பொறுத்தே அமையும்!

—அரிஸ்டாட்டில்

பட்டங்கள் மனிதனுக்குப் பெருமை தருவதில்லை; மனிதன்தான் பட்டங்களுக்குப் பெருமை தருகிறான்.

—மாக்கியவல்லி

# குழந்தைகள் நடத்தும் செய்தி நிறுவனம்

முழுக்க முழுக்கக் குழந்தைகளையும், இளைஞர்களையும் கொண்டே ஒரு செய்தி நிறுவனம், வெற்றிகரமாக நடத்தப்பட்டு வருகிறது. அதன் பெயர் 'சில்ட்ரன்ஸ் எக்ஸ்பிரஸ்'

நியூயார்க்கைத் தலைமையிடமாகக் கொண்ட இந்தச் செய்தி நிறுவனத்தில் 100 எழுத்தாளர்கள் மற்றும் தொழில் நுட்ப நிபுணர்கள் பணியாற்றி வருகின்றனர். இவர்கள் அத்தனை பேருமே 8 முதல் 18 வயதுக்கு உட்பட்டவர்கள்! இவர்களில் இந்தியச் சிறுமிகள் மூவரும் உள்ளனர்.

நியூயார்க்கில் மன்ஹாட்டன் பகுதியில் 25-வது தெருவில் இந்தச் செய்தி நிறுவனம் உள்ளது. இதனை முன்னாள் வழக்கறிஞரும், வர்த்தகருமான ராபர்ட் கிளாம்பிட் என்பவர் 13 ஆண்டுகளுக்கு முன்னால் நிறுவினார். பின்னர் இது படிப்படியாக வளர்ந்து புகழ்பெற்றுள்ளது. மாத இதழ் ஒன்றையும் இந்த நிறுவனம் நடத்துகிறது. தொலைக்காட்சியில் ஒரு புதிய தொடரையும் இது துவக்கியுள்ளது. 150க்கும் மேற்பட்ட அமெரிக்கப் பத்திரிகைகளுக்கு இந்த நிறுவனம் தனது செய்திகளை அனுப்பி வைக்கிறது.

### சாதனைகள்

துவக்க காலம் முதற்கொண்டே, இந்தப் புதுமைச் செய்தி நிறுவனம் பல சாதனைகளைப் புரிந்துள்ளது. குழந்தைத் தொழிலாளர் பிரச்னை முதற்கொண்டு, அண்மையில் நடந்து முடிந்த ஜனநாயக , குடியரசுக் கட்சிகளின் அதிபர் தேர்தலுக்கான வேட்பாளர் தேர்வு மாநாடுகள் வரையில், பலவற்றைக் குறித்து இந்த நிறுவனத்தின் இளம் நிருபர்கள் செய்தி சேகரித்து வெளியிட்டுள்ளனர்.

இந்த நிறுவனத்தில் பணியாற்றும் கவிதா என்னும் இந்தியச் சிறுமிக்கு 13 வயதாகிறது. கடந்த இரு ஆண்டுகளாக இவர் இந்நிறுவனத்துக்காகச் செய்திகளைச் சேகரிக்கிறார். ''என் வயதுக்கு அப்பாற்பட்ட வகையில், என்னால் இத்துறையில் ஒரு முத்திரை பதிக்க முடியும் என்பதை இங்கு எனது அனுபவம் நிரூபித்துள்ளது'' என்று அவர் சொன்னார். சமந்தா மண்டோர், மெலிஸ்ஸா மண்டோர் என்னும் மற்ற இரு இந்தியச் சிறுமிகளும் சகோதரிகள்.

—அமெரிக்கத் தகவல் மையம்

# சிறுசேமிப்பு முதலீட்டாளர்களுக்கு மாபெரும் பரிசுத் திட்டம்!

ஆர். பாஸ்கரன், இ.ஆ.ப.,

சிறுசேமிப்பு இயக்குநர்
சென்னை.

பொதுமக்களிடையே உள்ள உபரி வருமானத்தைச் சிறுசேமிப்பில் முதலீடு செய்து, அதன் மூலம் தேசிய நல, வளர்ச்சிப் பணிகளுக்காகப் பயன்படுத்துவதே, தேசிய சேமிப்புத் திட்டங்களின் முக்கியமான குறிக்கோள் ஆகும்.

மக்களின் எதிர்காலத் தேவைக்காகச் சேமிக்கும் பழக்கத்தை உருவாக்குவதற்கும், மக்களிடையே சிக்கன உணர்வை ஏற்படுத்தி சேமிக்கும் விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதற்கும் மட்டுமல்லாமல், எதிர்கால நலனை முன்னிட்டு வருமான வரிக்கான திட்டங்களை வகுப்பதற்கும், இத்திட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

பலதரப்பட்ட மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் வகையில் பல திட்டங்கள் உள்ளன. அவை:

1) இந்திர விகாஸ் பத்திரம், 2) கிசான் விகாஸ் பத்திரம், 3) தேசிய சேமிப்புத் திட்டம் 1987, 4) தேசிய சேமிப்புப் பத்திரம் 8-வது வெளியீடு, 5) அஞ்சலக மாதாந்திர வருவாய்த் திட்டம், 6) 10 ஆண்டு சமூகப் பாதுகாப்புப் பத்திரம், 7) குறிப்பிட்ட கால முதலீட்டுத் திட்டம், 8) ஐந்தாண்டு ரெக்கரிங் டெப்பாசிட் திட்டம், 9) அஞ்சலகச் சேமிப்புக் கணக்கு, 10) 15 ஆண்டு சேம நல நிதிக் கணக்கு, 11) ஓய்வு பெறும் அரசு ஊழியர்க்கான டெப்பாசிட் திட்டம்.

ஓய்வு பெறுபவர்கள், தினக் கூலிகள், மாணவர்கள், குடும்பத் தலைவிகள், வருமான வரி செலுத்துபவர்கள் இவர்களின் தேவைகளுக்கு ஏற்ப மேற்கூறிய திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன.

### பரிசுக் கூப்பன் திட்டம்:

சிறுசேமிப்பு வசூலில் மந்தமான காலமாகக் கருதப்படும் 1.6.90 முதல் 31.12.90 வரையிலான காலத்தில் சிறுசேமிப்பு மொத்த வசூலைத் தீவிரப்படுத்த 19.6.90-இல் ''மாவட்ட அளவிலான பரிசுகள் இணைந்த சேமிப்புத் திட்டம் - 1990'' என்ற பெயரில் சிறப்புத் திட்டம் ஒன்றை 1.6.90 முதல் 31.12.90 வரையிலான காலத்திற்கு அரசு அறிமுகம் செய்துள்ளது.

இத்திட்டத்தின் குறிப்பிடத்தக்க சிறப்பு அம்சங்கள் பின்வருமாறு:-

(1) தமிழ்நாடு மாநிலத்திலுள்ள ஒவ்வொரு மாவட்டமும், மாவட்ட அளவிலான பரிசுகள் இணைந்த சேமிப்பு திரட்டும் திட்டத்தைப் பொறுத்தவரையில் ஒரு அலகாகக் (யூனிட்டாக) கருதப்படும்.

(2) சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள், மாவட்ட அளவிலான பரிசுகள் இணைந்த சேமிப்பு திரட்டும் திட்டத்தின் மேலாளர்களாக இருப்பர். சென்னை நகரைப் பொறுத்த வரை சிறுசேமிப்பு இயக்குநர், இத் திட்டத்தை அமலாக்கும் மேலாளராக இருப்பார்.

(3) தமிழ்நாடு மாநிலத்திலுள்ள அஞ்சலகங்கள் கிளை அஞ்சலகங்கள் - அங்கீகரிக்கப்பட்ட வங்கிகள் ஆகியவற்றில் உள்ள சிறுசேமிப்புத் திட்டங்களில் ஏதேனும் ஒரு திட்டத்தில் முதலீடுதாரர்களால் செய்யப்படும் முதலீடுகள் இத்திட்டத்திற்குத் தகுதியுடையன.

(4) தனிப்பட்ட முதலீடுதாரர்கள் மட்டுமே இத்திட்டத்தின் கீழ் இலவசப் பரிசுக் கூப்பன்களைப் பெறுவதற்குத் தகுதியுடையவர்கள்.

(5) 1.6.90 முதல் 31.12.90 வரையிலான காலத்தில்கீழ்க்காணும் திட்டங்களில் ஏதேனும் ஒன்றில் முதலீடு செய்யப்படும் ஒவ்வொரு ரூ.500-க்கும் ஒரு இலவசப் பரிசுக்கூப்பன் அளிக்கப்படும்.

(அ) மாதாந்திர வருமானத் திட்டம், (ஆ) அஞ்சலக கால வைப்புத் திட்டம், (இ) கிசான் விகாஸ் பத்திரம், (ஈ) இந்திரா சேமிப்புத் திட்டம், (உ) அஞ்சலக தொடர் வைப்புத் திட்டம் - வளரும் மாத சேமிப்புத் திட்டம், (ஊ) தேசிய சேமிப்புத் திட்டம் - 1987, (எ) தேசிய சேமிப்புப் பத்திரம் - எட்டாவது வெளியீடு, (ஏ) 15 ஆண்டுப் பொது சேம நிதிக்கணக்குத் திட்டம்.

(6) 1.6.90 முதல் 31.12.90 வரையில் அஞ்சலகத் தொடர்வைப்புத் திட்டம் - வளரும் மாதச் சேமிப்புத் திட்டம் ஆகியவற்றில் முதலீடு செய்யப்படும் முதலீடுகள் மேற்கூறிய பரிசுத் திட்டத்திற்குத் தகுதியுடையவை.

(7) ஒரு இலட்சம் பரிசுக் கூப்பன்கள் கொண்ட ஒரு வரிசைக்கு ஒரு குலுக்கல் நடத்தப்படும். ஒரு வரிசைக்குரிய ஒரு இலட்சம் பரிசுக் கூப்பன்கள் அனைத்தும் முதலீட்டாளர்களுக்கு விநியோகிக்கப்பட்ட பின்னர், அதற்குரிய குலுக்கல் நடத்தப்படும். இத்திட்டத்தின் மேலாளர்கள் அவரவர்களுக்குரிய அதிகார வரம்பிற்குட்பட்ட பகுதிகளில் இக்குலுக்கல் முடிவுகள் குறித்து விரிவான விளம்பரம் செய்வார்கள்.

ஒவ்வொரு வரிசை பரிசுக் கூப்பன்களுக்கும் உரிய பரிசுகள் விவரம் வருமாறு:-

| பரிசுகளின் எண்ணிக்கை | பரிசுப்பொருளின் தன்மை | பரிசுப்பொருட்கள் விவரம் |
|---|---|---|
| 1 | சூப்பர் பம்பர் பரிசு | மாருதி கார் |
| 1 | முதல் பரிசு | பஜாஜ் ஸ்கூட்டர் |
| 2 | இரண்டாவது பரிசு | வண்ணத் தொலைக்காட்சிப் பெட்டி (ஈ.சி.கலர் டெலிவிஷன்) |
| 3 | மூன்றாவது பரிசுகள் | குளிர்பதனப் பெட்டி |
| 5 | நான்காவது பரிசுகள் | மோஃபா |
| 10 | ஐந்தாவது பரிசுகள் | தையல் இயந்திரம் |
| 10 | ஆறாவது பரிசுகள் | சைக்கிள் |
| 30 | ஏழாவது பரிசுகள் | குவார்ட்ஸ் கைக்கடிகாரம் |
| 200 | ஆறுதல் பரிசுகள் | சுவர்க்கடிகாரம் |
| 262 | மொத்த பரிசுகள் | |

சென்னை நகரைப் பொறுத்தவரையில் சிறுசேமிப்பு இயக்குநர் அவர்களும், மாவட்ட அளவில் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்களும் இத்திட்டத்தைச் செயல்படுத்த மேலாளர்களாக இயங்குவர். ஒவ்வொரு ரூபாய் 500/- முதலீட்டிற்கும் முதலீடுதாரருக்கு ஒரு இலவசப் பரிசுக் கூப்பன் வழங்கப்படும். ஒரு இலட்சம் இலவசப் பரிசுக் கூப்பன்கள் வழங்கிய பின் குலுக்கல் நடத்தப்படும். பரிசு பெற்றவர்கள் பரிசுப் பொருளுக்குரிய ரொக்க மதிப்பைப் பெறுவதற்கும் இத்திட்டத்தில் வாய்ப்புண்டு.

தனியார் நிறுவனங்களில் செய்யப்படும் முதலீட்டிற்கு அதிகப்பட்சமாக வட்டி வழங்குவதாக விளம்பரப்படுத்தப் பட்டாலும், அது முழுப் பாதுகாப்புத் தன்மையற்றது. ஆனால், அரசு செக்யூரிட்டிகள், உயர்ந்தபட்சப் பாது காப்பு அளிப்பதுடன் முதலீடு மற்றும் வட்டிக்கு வரி விலக்குச் சலுகையையும் அளிக்கின்றன. அவற்றில் கிடைக்கப்பெறும் வட்டி விகிதமும் உயர்ந்தபட்சமாக உள்ளது. உதாரணமாக, இந்திரா விகாஸ் பத்திரம் 20% தனிவட்டி அளிக்கவல்லது. மேலும் 15 ஆண்டு பொதுச் சேம நிதிக்கணக்கு (PPF) தேசிய சேமிப்புத் திட்டங்கள் அதிகப்பட்ச வட்டியை அளிப்பதுடன், வரிச்சலுகைகளை யும் அளிக்கக் கூடியது.

**முதலீட்டாளர்களுக்கு ஊக்கத் தொகை:**

1.6.90 முதல் 31.12.90 வரை ரூ.1,000/-ம், அதற்கு மேலும் முதலீடு செய்பவர்களுக்கு 1% ஊக்கத் தொகை வழங்க அரசு ஆணையிட்டுள்ளது.

(1) கிசான் விகாஸ் பத்திரம், (2) தேசிய சேமிப்புத் திட்டக் கணக்கு 1987, (3) தேசிய சேமிப்புப் பத்திரம் - எட்டாவது வெளியீடு, (4) அஞ்சலக மாதாந்திர வரு மானத் திட்டம், (5) அஞ்சலக குறித்த கால முதலீடு, (6) பொது சேம நல நிதிக் கணக்கு, (7) சமூகப் பாது காப்புப் பத்திரம், (8) ஓய்வு பெறும் அரசு ஊழியர் களுக்கான டெப்பாசிட் திட்டம்.

மேற்கண்ட சிறுசேமிப்புத் திட்டங்களில், பொது மக்கள் சேர்ந்து அரசு அளித்துள்ள சிறப்புச் சலுகை களைப் பெற்றுப் பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படு கிறார்கள்.

# காவிரி நதிநீர்ப் பிரச்சினை தொடர்பாகத்தொழில் நுணுக்கக் குழு

**கா**விரி நதி நீர்ப் பிரச்சினை குறித்து மத்திய அரசு, நீதிபதி முகர்ஜி தலைமையில் நடுவர் மன்றத்தை அமைத்துள்ளது. இந்தப் பிரச்சினை தொடர்பாக, தமிழக அரசின் சார்பில் ஆதாரங் களைத்தருவதற்கு தொழில் நுணுக்கக் குழு ஒன்றைத் தமிழக அரசு உருவாக்கியுள்ளது. இக்குழுவில் இடம் பெற்றுள்ள உறுப்பினர்கள் விவரம் வருமாறு:-

1. திரு. ஏ. மோகன கிருஷ்ணன்
ஓய்வுபெற்ற தலைமைப் பொறியாளர் (தலைவர்)
2. திரு. பி. மாணிக்கவாசகம்
ஓய்வுபெற்ற தனி அலுவலர்,
3. திரு. ஏ. லோகநாதன்
மேற்பார்வைப் பொறியாளர்,
பொதுப்பணித் துறை, தஞ்சாவூர்.
4. திரு. ஆர். முரளிதரன்
உதவிப்பொறியாளர், பொதுப்பணித்துறை.
5. திரு. எம்.எஸ். ராமமூர்த்தி
முதன்மைத் தலைமை வரைவாளர்,
6. திரு. கொளத்து
முதன்மைத் தலைமை வரைவாளர்,
7. திரு. கிருஷ்ணமூர்த்தி
ஓய்வுபெற்ற இணைச் செயலர், சட்டத்துறை
8. திரு. டி. கிருஷ்ணசாமி
செயற்பொறியாளர், (செயலர்)
பொதுப்பணித்துறை, மதுரை.

திரு. ஆர். திருமலை - தனி ஆலோசகர்
(பாசன மேம்பாட்டு நீர்வள
நிலை ஆணைக்குழுத் தலைவர்)



**தமிழ்நாட்டில் உள்ள ஆண்-பெண் அனைவரும் கல்வியறிவு பெறவேண்டும் என்பதில் கண்ணும் கருத்துமாகத் திட்டங்களைத் தீட்டிச் செயல்படுத்தி வருகிறது தமிழக அரசு; கல்வி வளர்ச்சிக்காகக் கடந்த ஓராண்டாகச் செயல்படுத்தப்பட்டு வரும் அற்புதப் பணிகளில் குறிப்பிடத்தக்க சில- இங்கே தொகுத்தளிக்கப்படுகின்றன.**



# மாணவ மணிகளின் நலன் காக்கும் அரசு

◎ மகளிர் தொழிற் கல்வி வாய்ப்பு பெருகுவதற்காக சேலம்-கோவை-திருச்சி மாவட்டங்களில் தொழிற் பயிற்சி நிலையங்களும், 439 சிற்றூர்களில் வரும் ஆண்டில் புதிய ஓராசிரியர் ஆரம்பப் பள்ளிகளும் ஏற்படுத்தப்படும்.

◎ ஆரம்பப் பள்ளிகளில் கூடுதலாகச் சேர்க்கப்படும் மாணவர்களுக்குப் போதிய இடவசதி இப்போது இல்லை; எனவே, கிராமப்புற ஆரம்பப் பள்ளிக் கட்டடங்களைச் சரிவரப் பராமரிக்கவும்- பழுது பார்க்கவும் ரூ.3 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

◎ கொடைத்தன்மை வாய்ந்தோர்-முதல் வகுப்பிலிருந்து எட்டாம் வகுப்பு வரை பயிலும் சிறுமியரைத் தத்தெடுத்து அச்சிறுமியரின் பெற்றோருக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.250/- வழங்குவதற்கான 'வளர்ப்புப் பெற்றோர் திட்டம்' என்ற புதுமையான திட்டம் ஒன்றும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பள்ளிகளில் சேர்பவர்கள் தொடர்ந்து பயிலாமல், இடையில் நின்றுவிடும் நிலை சிறுமியரிடையே உள்ளது; அதனைச் சீர்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கம்.

◎ அனைத்துத் தொடக்கப் பள்ளிகளிலும் 5-ஆம் வகுப்பு வரை படிப்படியாகப் பெண்களே ஆசிரியர்களாக நியமிக்கப்படுவார்கள்...

◎ 18.5.90-ல் பிறப்பிக்கப்பட்ட அரசு ஆணையொன்று, வரும் கல்வியாண்டில் - அதாவது 1990-91-ஆம் ஆண்டு முதல், முதல் மூன்று வகுப்புகளுக்கும் பெண் ஆசிரியைகளையே பணியமர்த்த வழிசெய்கிறது.

◎ 500-க்கும் மேற்பட்ட மக்கள் வாழும் இடங்களில் புதிய தொடக்கப் பள்ளிகள் தொடங்கப்படும்.

◎ பணியில் இருக்கும்போது இயற்கை எய்தும் ஆசிரியர்களைச் சார்ந்திருப்பவர்கள்,ஆசிரியர் பயிற்சி பெற்றுப் பணியில் அமர, ஆசிரியர் பயிற்சி நிறுவனம் ஒவ்வொன்றிலும் இரண்டு இடங்கள் இந்த ஆண்டு முதல் ஒதுக்கப்படும்.

◎ தொழிற் கல்வியை வாரத்திற்கு ஆறுமணி நேரம் கற்பிக்கும் பகுதி நேர ஆசிரியர்களின் பணிகள் ரூ.1400-2600 எனும் ஊதிய விகிதத்தில் இரண்டு ஆண்டுகளில் வரன்முறைப்படுத்தப்படும்.

◎ தொழில் பயிலகங்கள் மேம்பாட்டிற்காகத் திட்டமிடப்பட்டு ரூ.100 கோடிக்கு உலக வங்கிக் கடன் கோரப்படும்.

◎ 1990-91-ஆம் ஆண்டிலிருந்து, மக்கள் நலப் பணியாளர்களைக் கொண்டு அனைத்து ஊராட்சிகளிலும் வயதுவந்தோர் கல்வி மையங்கள் ஏற்படுத்தப்படவுள்ளன.

◎ பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர், ஆதி-திராவிடர், பழங்குடியினர் ஆகிய வகுப்புகளைச் சேர்ந்த மாணவ-மாணவிகள் அதிக அளவு வாய்ப்புகளைப் பெறுவதற்காக நுழைவுத் தேர்வு எழுதுவதற்கு அவர்களுக்கு வரையறுக்கப்பட்ட குறைந்த அளவு மதிப்பெண்களை அரசு மேலும் குறைத்துள்ளது.

◎ வெளிநாடுகளில் உள்ளதைப் போலக் குழந்தைவழி நலக் கல்வித் திட்டத்தையும் தமிழக அரசு கொண்டு வந்துள்ளது. குழந்தைகள் சுத்தமாகவும், நோய்க்கு ஆளாகாமலும் இருப்பதற்குக் குழந்தைகளுக்குக் கற்றுக் கொடுத்து, அந்தக் குழந்தைகள் மூலமாக மற்ற குழந்தைகளுக்கு அதன் தன்மையை உணர வைக்கும் திட்டம் தான் குழந்தைவழி நலக்கல்வித் திட்டமாகும்.

குழந்தைகளுக்கான திட்டம் என்பதால் ஒரு குழந்தையைக் கொண்டு இத்திட்டத்தைத் தொடங்கி வைப்பது என்ற முடிவுப்படி- குடும்ப நலத் துறை இயக்குநர் திரு பி.எஸ். பாண்டியன் தலைமையில், மாண்புமிகு முதல்வர் அவர்களின் பேத்தி செந்தாமரை மூலம் 1.4.'90 அன்று சென்னையில் இத்திட்டம் சிறப்புறத் தொடங்கி வைக்கப்பட்டது.

◎ முதல் வகுப்பிலிருந்து எட்டாம்

வகுப்பு வரை படிக்கும் ஊனமுற்ற மாணவர்கள் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் வாங்குவதற்காக ஆண்டிற்கு ரூ.10 முதல் ரூ.84 வரை உதவித் தொகை வழங்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின் கீழ், பத்தாயிரம் மாணவர்களுக்கு இந்த உதவித்தொகை தமிழக அரசால் வழங்கப்படுகிறது.

◎ ஆறுமாதம் முதல் ஆறு வயது வரையிலான குழந்தைகளுக்கு ஊட்டச் சத்துணவு வழங்குவதற்கான திட்டம் ரூ.350 கோடியில் உலக வங்கி நிதி உதவியுடன், தமிழகத்தில் தீட்டப் பட்டுள்ளது. சத்துணவுத் திட்டத்தின் கீழ் பயன்பெறும் குழந்தைகள் அதிக ஊட்டச்சத்து பெறவும், கண்ணில் ஏற்படும் குறைகளைத் தவிர்க்கவும் மருத்துவ நிபுணர்களின் அறிவுரையின் பேரில் 3-க்கு மேல் 5 வயதிற்கு உட்பட்ட குழந்தைகளுக்கு ஆறு மாதத்திற்கு ஒருமுறை இரண்டு லட்சம் இன்டர்நேஷனல் யூனிட்டால் வைட்டமின் மாத்திரைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

◎ சத்துணவுத் திட்டம் மூலம் பயனடையும் ஒன்று முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலும் மாணவ-மாணவியர்க்கு இலவசக் காலணிகள் வழங்கும்பொருட்டு, காலணிகள் தயாரிப்பதற்காக சமூகநலத் துறையில் மகளிர் காலணி கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தப்பட்டன. இச்சங்கத்தின்மூலம் இரண்டாயிரத்திற்கும் மேலான ஆதிதிராவிட மகளிர் வேலைவாய்ப்புப் பெற்றார்கள்.

◎ தமிழ்நாட்டில்- உயர்நிலைப் பள்ளிகளில் (S.S.L.C.) படிக்கும் மாணவர்களில் அதிக மதிப்பெண்பெறும்முதல் மூன்று மாணவர்களுக்கு முறையே முதல் பரிசு (ரூ.3000), இரண்டாம் பரிசு (ரூ.2000), மூன்றாவது பரிசு (ரூ.1000) ஆகியவை மட்டுமே வழங்கப்பட்டு வந்தன. 1989 முதல் அதை மாற்றி- எஸ்.எஸ்.எல்.சி. தேர்வுகளில் ஐந்து பாடங்களுக்கும், தனித்தனியாக ஒவ்வொரு பாடத்திற்கும் மூன்று பரிசுகள் வீதம் அரசு 15 பரிசு களை வழங்குகிறது.

◎ மேனிலைப் பள்ளிகளில் தேர்ச்சி பெற்ற மாணவர்களில் அதிக மதிப்பெண் பெற்ற முதல் மூன்று மாணவர்களுக்கு மட்டும் முறையே ரூ. 5000/-, ரூ.3000/- ரூ.2000/- என வழங்கப்பட்டது. இதை மாற்றி-



1989 முதல் மேனிலைப் பள்ளியில் தமிழ், சிறப்புத் தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிப்பாடங்களுக்குத் தனித்தனியாக முதல் பரிசு ரூ.5000/-, இரண்டாம் பரிசு ரூ.3000/-, மூன்றாம் பரிசு ரூ.2000/- ஆகியவையும் மற்ற 22 பாடங்களுக்குத் தனித்தனியாக முதல் பரிசு ரூ.3000/-, இரண்டாவது பரிசு ரூ.2000/-, மூன்றாம் பரிசு ரூ.1000/- எனக் கணக்கிட்டு மொத்தம் 75 பரிசு களை அரசு வழங்கி வருகிறது.

